# மரண சிந்தனை

தொகுப்பு Dr. A. முஹம்மது அலீ Ph.D.,
முன்னாள் பேராசிரியர். அகில உலக இஸ்லாமிய பல்கலைக் கழகம் மலேசியா

---

மரணம், சாவு, இறப்பு, அழிவு இவ்வுலகில் உருவான எல்லாப் படைப்பினங்களும் சந்திக்க வேண்டிய சத்தியம். ஆனால், எவரும் இச்சத்தியத்தைப் பற்றி சிந்திக்கவோ, பேசவோ, விவாதிக்கவோ தங்களின் உரையாடலில் பங்குப் பெறச் செய்யவோ விரும்புவ தில்லை. காரணம்: இப்பூவுலகில் நலமாக, வளமாக, சுகமாக, சந்தோஷமாக வாழ விரும்புகையில் மரணத்தைப் பற்றி நினைப்பதோ, நவில்வதோ அபச்சாரமாக, துர்சகுனமாக பாவிக்கின்றனர். எனவே, பெரும்பாலோரிடம் மரணம் பற்றிய சிந்தனையில்லை.

ஓரிறைக் கொள்கைக் கொண்ட ஏகத்துவவாதி மரணத்தைப் பற்றிய சிந்தனையின்றி இருப்பதில்லை இருக்க முடியாது இருக்கவும் கூடாது. ஓரிறைவன், ஒரே தலைவர், ஒரே மார்க்கம் ஒரே வேத நூல் ஒரே சட்டம் என்றக் கொள்கை கொண்ட ஒவ்வொரு முஸ்லிமும் தன்னுடைய இவ்வுலக வாழ்வும் ஒன்றே நிரந்தரமற்றது மிகவும் குறுகிய காலக் கெடுவைக் கொண்டது என்ற நம்பிக்கை வைத்திருக்கிறான்.

இவ்வுலக வாழ்வின் முடிவு மரணம் மரணத்திற்குப் பின் ஒரு நிரந்தர, நித்ய வாழ்வு உண்டு அவ்வாழ்வில் நாம் இவ்வுலகில் வாழ்ந்த தற்கொப்ப கூலி, வெகுமதி (தண்டனை) ஏகனால் வழங்கப்படும் என்பதை இஸ்லாத்தின் ஓரிறைக் கொள்கையின் ஒர் அங்கமாக உளப்பூர்வமாக முஸ்லிம்கள் நம்புகிறார்கள். அப்படி நம்பாதவன் உண்மை முஸ்லிமாக இருக்கும் தகுதியை இழக்கிறான்.

மரணம் நிச்சயம் அது சத்தியம் என நினைக்கிற ஒவ்வொரு மனிதனும் நல்லவனாக வாழ நிச்சயம் ஆசைப்படுவான். மரண சிந்தனையற்றவன் எப்படியும் வாழலாம் நலமும், வளமுடன் வாழ்ந்தால் போதுமென தன்னுடைய மனோ இச்சைப்படி வாழ்வான். இதனை இஸ்லாம் அங்கீகரிப்பதே இல்லை.

இஸ்லாத்தை மட்டுமே தன்னுடைய நேரிய மார்க்கமாக ஏற்றுள்ள ஒவ்வொரு முஸ்லிமும் நல்லொழுக்கமுள்ளவனாக வாழ தினசரி மரணத்தைப் பற்றி ஒவ்வொரு நொடியும் மறவாமல் சிந்திக்க வேண்டும். இதனை இஸ்லாமிய ஒழுக்கநெறியின் முழுமையான முதல் அங்கமாக இன்றளவும் முஸ்லிமாக இருக்கும் ஒவ்வொரு ஆணும், பெண்ணும் நடைமுறைப்படுத்தி வருகிறார்கள்.

முஸ்லிம்களின் ஒப்பற்ற தலைவர் முஹம்மது(ஸல்) அவர்கள் நம்முடைய தினசரி வாழ்வின் - நாளின் - ஆரம்பத்தை (விழிப்பை) யும், முடிவை (தூக்கத்தை)யும் மரண சிந்தனையுடன் அமைத்துக் கொள்ளப் பணித்துள்ளார்கள். பெரும்பாலான முஸ்லிம்கள் இதனை தங்களின் வாழ்க்கைநெறியாகக் கொண்டு செயல்படுத்தி வருகிறார்கள்.

## தினசரி மரணம்: உறக்கம்

ஏகனின் ஏகமறை இயம்புவதைப் பாரீர்:

அல்லாஹ் உயிர்களை அவை மரணிக்கும்போதும், மரணிக் காதவற்றை அவற்றின் நித்திரையிலும் கைப்பற்றி, பின்பு எதன் மீது மரணத்தை விதித்து விட்டானோ, அதை(த் தன்னிடம்) நிறுத்திக் கொள்கிறான். மீதியுள்ள வற்றை ஒரு குறிப்பிட்ட தவணை வரை (வாழ) அனுப்பி வைக்கிறான்.

சிந்தித்துப் பார்க்கும் மக்களுக்கு (இதில்) நிச்சயமாக (நல்ல) அத்தாட்சிகளுள்ளன. (அல்குர்ஆன் 39:42)

மேற்கண்ட இறைவாக்கின்படி நித்திரை - தூக்கம் - உறக்கம், நாம் தினசரி சந்திக்கும் சிறிய மரணம் - சாவு என்பது தெளிவாகிறது. இதனடிப்படையில் ஒவ்வொரு முஸ்லிமும் படுத்துறங்க, செல்லும் போது மரண சிந்தனையுடன் செல்ல நபி(ஸல்) அவர்கள் கூறிய அறிவுரை:

'அல்லாஹு ம்ம பிஸ்மிக்க அமூத்து வ அஹ்யா'

யா அல்லாஹ்! உன்னுடைய திருநாமம் போற்றி நான் மரணிக்கிறேன் மேலும், (நீ விரும்பி காலையில் விழிக்கச் செய்தால்) நான் உயிர்ப் பெறுவேன்.

அவ்வாறே அதிகாலையில் கண்விழித்தவுடனே மரண சிந்தனையுடன் மேற்கூறிய இறைவாக்கின்படி நம்மை உறக்கத் தில் மரணிக்கச் செய்யாமல், மீண்டும் உயிர் தந்து விழிக்கச் செய்த ஏகன் அல்லாஹ்விற்கு நன்றி செலுத்தி பிரார்த்திக்குமாறும் இறைத் தூதர்(ஸல்) அவர்கள் அறிவுரைக் கூறினார்கள்.

'அல்ஹம்துலில்லாஹில்லதீ அஹ்யானா பஅத மா அமாத்தனா

வ இலைஹின் னுஷூ ர்.

எங்களை (தூக்கத்தில்) மரிக்கச் செய்து (விழிப்பு மூலம்) உயிரைத் திருப்பித் தந்த அல்லாஹ்வுக்கே எல்லாப் புகழும்! (இறுதி யான மரணத்திற்குப் பின்) அவனிடமே நாம் திரும்புவோகி. அறிவிப்பாளர்கள்: ஹு தைபா பின் யமான் அபூதர், பர்ராஉ பின் ஆஜிப், அபூஹு ரைரா,(ரழி - அன்கும்) ஆதாரங்கள்: புகாரி, ர.அ. 6312, 6314, 6324, 6325, 7394, 7395 முஸ்லிம் ஆ.மொ: 6544 அபூதாவூத்: 5031, 5050, திர்மிதீ 3819, 3339 இப்னுமாஜா: 3870, 3878, முஸ்னது அஹ்மது: 11862, 17938, 20404, 22184, 22198, 22280, 22301, 22362, 8295, 10345,

இவ்விதம் பிரார்த்திப்பதன் மூலம் ஒவ்வொரு முஸ்லிமும் தனக்கு தினசரி நிகழும் "உறக்கம் என்ற சிறிய மரணத்தையும், இறுதி மரணத்தையும் நினைத்து, அச்சிந்தனையுடன் தனது அன்றாடப் பணிகளைச் செய்ய வேண்டுமென்பது இஸ்லாமிய நெறியாகும். இதற்கான காரணக் காரியங்களைப் பார்ப்போம்:

## 'பிறப்பு' என்றால் 'இறப்பு' உண்டு

நாம் வாழும் இப்பரந்த பூவுலகில் எண்ணிலடங்காத பல கோடி படைப்பினங்கள், உயிரினங்கள் உள்ளன. இன்று வாழும் மனிதர்களின் வருகைக்கு முன்பிருந்தே சூரியன், சந்திரன், பல கோடி நட்சத்திரங்கள், கோளங்கள் என வானிலும், மரம், மலை, மடுக்கள் என பூமியிலுமுள்ளன. பூமியியல், வானியல் ஆராய்சியாளர்கள் இவையனைத்தும் பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன் உருவாயின. காலப்போக்கில் ஒரு நாள் இவையனைத்தும் அழியும் எனக் கூறுகின்றனர். இப்பிரபஞ் சத்திலுள்ள அனைத்திற்கும் அவை உருவான ஆரம்பம் - பிறப்பு உள்ளன. பிறவியெடுத்த அனைத்தும் அழியும் ஆரம்பம் என்று ஒன்றிருந்தால், அதற்கு முடிவு என்று ஒன்று இருந்தே ஆக வேண்டும் பிறப்பு என்று ஒன்றிருந்தால் அதற்கு இறப்பு என்று ஒன்று இருந்தே ஆகவேண்டும் என்பது எல்லோரும் ஏற்கும் இயற்கை நியதி.

மனிதனால் உருவாக்கப்படும் அனைத்திற்கும் ஆரம்பம் (னுயவந டிக ஞசடினரஉவடிே) முடிவு (நுஒயீசைல னயவந) குறிக்கப்படுவதைக் காணலாம். அஃறிணைப் பொருட்களுக்கு முடிவு என்றும் உயிரினங்களுக்கு சாவு, மரணம், இறப்பு என்றும் அம்முடிவைக் குறிப்பிடுகின்றனர். இப்பூவுலகில் மிகவும் மேன்மையான படைப்பான மனிதனின் ஆரம்பம் அவனுடைய தாயின் கருப்பையில் உருவாகி

சுமார் பத்து மாதங்கள் கருவறையில் முழு வடிவமைந்து பிரசவம் என்பதின் மூலம் இப்பூவுலகில் பிறப்பதில் ஆரம்பமாகிறது.

இப்பிரபஞ்சத்தில் உருவான, பிறவியெடுத்த அனைத்தும் அதற்குரிய காலக்கெடு முடிந்ததும் அதனதன் முடிவை, சாவை, இறப்பை, மரணத்தைச் சந்திக்கும் சந்தித்தே ஆகவேண்டும் என்பது விஞ்ஞானிகளும் ஏற்கும் மெஞ்ஞான உண்மை. நித்தியமானது நிரந் தரமானது முடிவற்றது சாகாவரம் பெற்றது என்று எப்படைப் பினமுமில்லை. இந்நிலையில் மிகவும் மேலான படைப்பான ஒவ் வொரு மனிதனும் தனது இவ்வுலக வாழ்வின் முடிவை மரணத்தின் மூலம் சந்தித்தே ஆக வேண்டும். இது நிச்சயம் சத்தியம்.

தாயின் கருவறையிலிருந்து இப்பூவுலகில் பிறக்கின்ற போதே அனைவரும் நிச்சயிக்கப்பட்ட (Confirmed) மரணத்தின் பயணச் சீட்டை (Ticket) பெற்றவர்களாக தங்களது இவ்வுலக வாழ்வை ஆரம்பிக்கின்றனர். எவரும் இதில் விதிவிலக்கல்ல. ஆனால், அனை வரும் சந்திக்கவுள்ள மரணத்தைப் பற்றி மக்களிடையே கருத்து வேறுபாடுகள் உள்ளன.

மரணம் பாவத்தின் சம்பளம் என்பது ஒரு சாராரின் கருத்து. பூர்வீகஜென்மம் பலப் பிறப்பு என்ற கோட்பாடுடையவர்கள் மரணம் இப்பிறவியின் முடிவ் இப்பிறவியின் செயல்பாடுகளுக் கொப்ப மரணித்தவன் இப்பூவுலகில் மீண்டும் மறுபிறவி எடுப்பான் என்பது அவர்களது கருத்து. மரணம் இவ்வுலக வாழ்வின் முடிவ் நிரந்தரமான மறுமை வாழ்வின் ஆரம்பம் என்பது ஏகத்துவவாதி களின் தெளிவான நம்பிக்கை. மறு பிறவியுமில்லை மறுமையும் இல்லை மரணத்திற்குப் பின் எதுவுமில்லை மண்ணோடு மண்ணாக மாறிவிடுவோகி என்பது நாத்திகர்களின் கருத்து.

மரணத்திற்குப் பின்னுள்ள நிலைமையைப் பற்றி பல்வேறு பட்ட, கருத்துக்கள் நிலவினாலும் அனைவரும் மரணத்தை சந்தித்தே தீரவேண்டுமென்பதில் கருத்து வேறுபடவில்லை. நாம் அனைவரும் ஒரு நாள் சாவோகி மரணிப்போம் இறப்போம் என்பதை நினைவில் நிறுத்தி அம்மரணத்தைப் பற்றிய இஸ்லாமிய கண்ணோட்டம் என்ன? என்பதைப் பார்ப்போம்.

மரணமில்லாதவன் அனைத்தையும் படைத்து, பரிபாலித்து, போஷிக்கும் ஏகன் ஒருவன் அல்லாஹ் மட்டுமே. ஏனெனில்,

அவனே ஆதி, அந்தம் ஆரம்பம், முடிவு இல்லாதவன். அவனை அன்றி அனைத்தும் அவனுடைய படைப்பினங்கள் ஆரம்பம், முடிவு, பிறப்பு, இறப்பு என்ற கட்டுப்பாட்டில் அடங்கியவை. படைப்பினங்கள் அனைத்தும் ஒரு குறிப்பிட்ட காலத்தில் உருவாகி, பிறவி எடுத்து, ஏகன் அல்லாஹ் அதற்கென விதித்துள்ள கடமை களைச் செவ்வனே செய்து முடித்து அதற்குரிய காலக்கெடு முடிந்ததும் அழிகின்றன் அல்லது மரணிக்கின்றன. அனைத்திற்கும் ஆரம்பத்தையும், பிறப்பையும் அதன் முடிவையும், மரணத்தையும் நிச்ச யித்திருப்பவன் ஆதி அந்தமற்ற ஏகன் இறைவனே! இதனை இஸ்லாத்தின் இறுதி வேதம் திருக்குர்ஆன் தெளிவுபடுத்துவதைப் பாரீர்:

நிச்சயமாக அவனே மரிக்கச் செய்கிறான் இன்னும் உயிர்ப்பிக்கின்றான். அல்குர்ஆன் 53:44

இதே கருத்தினை வெவ்வேறு சொற்றொடர்களில் திருக்குர் ஆனில் 3:156, 7:158, 9:116, 15:23, 23:80, 40:58 வசனங்களிலும் காணலாம்.

இப்பிரபஞ்சத்திலுள்ள வானம், அதிலுள்ள சூரியன், சந்திரன், செவ்வாய் மற்றும் எண்ணிலடங்கா நட்சத்திர மண்டலங்கள், கோளங்கள் அவற்றிலுள்ள படைப்பினங்கள் பூமி அதிலுள்ள பல கோடி படைப்புகளான செடி, கொடி, மரம், மலை, மடுக்கள் மற்றுமுள்ள உயிரினங்களான ஓரறிவு தாவரம் முதற்கொண்டு அனைத்தையும் தனது கட்டுப்பாட்டில் வைத்து பலனடையும் மேலான படைப்பான

பகுத்தறிவு மிக்க மனித இனம் வரை அனைத்தும் (ஏகனின் வல்லமையால் உருவான படைப்பினங்கள்) அழியக்கூடியவை அதனதன் முடிவை. சாவை, இறப்பை, மரணத்தை சுவைக்கக் கூடியவை.

ஏகன் இறைவன் அல்லாஹ் மட்டுமே மரணமற்றவன் நிரந்தரமானவன் நிலைத்து ஜீவிப்பவன். முடிவற்றவன் அதுவே ஏகன் அல்லாஹ்வின் மேலான வல்லமை, கண்ணியம், ஈடிணையற்ற சக்தியின் வெளிப்பாடு என்பதை நினைவுறுத்துவதைக் காண்பீர்:

அதிலுள்ள அனைத்தும் அழியக்கூடியவை வல்லமையும், கண்ணியமும் மிக்க உமது இரட்சகனின் முகமே நிலைத்திருக்கும். (அல்குர்ஆன் 55: 26, 27)

### மரணத்திற்கும் ஒரு நாள் மரணமுண்டு

வானமும் பூமியும் அவற்றிலுள்ள சூரியன், சந்திரன் மற்றும் அனைத்து கோளங்களும் வானளாவ உயர்ந்து நிற்கும் மலைகள் எப்படி கடைசி நாளன்று அழிக்கப்படும் என்பதை ஏகன் வல்லோன் அல்லாஹ் தனது திருமறையில் பல வசனங்களில் குறிப்பிடுவதைக் காணலாம். விபரம் பெற நாடுவோர் திருகுர்ஆனில் 75:6 முதல் 12, 77:7 முதல் 11, 78: 19, 20, 79:6 முதல் 10, 81:1 முதல் 11, 82:1 முதல் 3, 84:1 முதல் 5, 99:1 முதல் 4, 101:1 முதல் 5 வசனங்களைப் பார்வையிடவும்.

மரணமற்றவன், நித்தியமானவன், நிரந்த ஜீவனுள்ளவன் ஏகன் அல்லாஹ் மட்டுமே என்ற ஏகத்துவக் கொள்கையை நிலை நிறுத்த அல்லாஹ் வானவர்களையும் மரணமடையச் செய்து உயிர் கொடுப்பான் என்பது இஸ்லாமியக் கொள்கையாகும். இதன் அடிப்படையில் இஸ்லாமிய கொள்கைப்படி ஒளியினால் (நூர்) படைக்கப்பட்ட வானவர்கள் நெருப்பால் படைக்கப்பட்ட ஜின்வர்க்கத்தினர் மண்ணிலிருந்து படைக்கப்பட்ட மனித இனம் மற்றனைத்தும் மரணத்தை தழுவும் என்பது தெளிவாகிறது.

இறைவனின் படைப்பினங்களில் ஏதாவதொன்று மரணத்தை சுவைக்கவில்லையெனில், அது மரணமற்ற நித்யனான இறைவனின் தனிப்பெரும் பண்பைக் கொண்டதாகிவிடும். எனவே, மரணத்தின் பொறுப்பாளியாக அல்லாஹ் நியமித்துள்ள 'மலக்கல் மௌத்' என்ற வானவரும் இறுதியாக மரணத்தைத் தழுவுவார். மரணமும் மரணத்தைத் தழுவியப் பின் மறுமையில் சுவனத்திலும், நரகில் உள்ளவர்கள் மரணமற்ற தீர்ப்பாணைகளை அனுபவிப்பார்கள் என்பதை நபி(ஸல்) அவர்கள் அறிவுறுத்தினார்கள்:-

மறுமையில், கருமை கலந்த வெள்ளாடு ஒன்றின் தோற்றத்தில் மரணம் கொண்டு வரப்படும். அச்சமயம் அறிவிப்பாளர் (வானவர்)களில் ஒருவர் சுவனவாதிகளே! என்று அழைப்பார். சுவர்க்கத்திலிருப்பவர்கள் தலையை நீட்டிப் பார்ப்பார்கள். அறிவிப்பாளர் (அவ்வானவர்) இதை (இந்த ஆட்டை) "நீங்கள் அறிவீர்களா? எனக் கேட்பார். சுவனவாதிகள் (இவ்வுலகில் மரணிக்கின்றபோது மரணத்தை நேரில் கண்டு அதன் கடுமையான வேதனைகளை அனுபவித்திருப்பதால்) "ஆம், இது தான் மரணம் என பதிலளிப்பார்கள். அவர்கள் அதை முன்பே பார்த்திருக்கிறார்கள். பிறகு அந்த அறிவிப்பாளர் (வானவர்) நரகவாதிகளை நோக்கி "நரகவாதிகளே! என்று அழைப்பார். நரகவாதிகள் தலையை நீட்டிப் பார்ப்பார்கள். அறிவிப்பாளர்: இதை நீங்கள் அறிவீர்களா? என வினவுவார். நரகவாதிகளும் (தங்களின் மரணத்தின்போது அனுபவப்பூர்வமாக பார்த்திருப்பதால்) "ஆம், இது தான் மரணம் என விடையளிப்பார்கள். ஏனெனில், அவர்கள் முன்பே மரணத்தை பார்த்துள்ளனர்.

பின்னர் அது (ஆட்டின் தோற்றத்திலுள்ள மரணம்) அறுக்கப்பட்டுவிடும். பிறகு அறிவிப்பாளர், "சுவனவாதிகளே! நிரந்தரம் இனி மரணமில்லை என்றும் நரகவாதிகளே! நிரந்தரம் இனி மரணமில்லை" என்றும் அறிவிப்பார். அறிவிப்பவர்: அபூசயீத் அல்குத்ரீ(ரழி)

ஆதாரங்கள்: புகாரி ர.அ: 4730, முஸ்லிம்: ஆ.மொ: 6827

திர்மிதி: 2481, முஸ்னது அஹ்மது: 10644

மரணமற்றவன் நிரந்தரமானவன் நித்ய ஜீவன் தன்னைத் தவிர. எவருமில்லை என்பதை நிலைநிறுத்தி, தனது அளப்பரிய வல்லமையையும் சக்தியையும் ஏகத்துவ கோட்பாட்டையும் வெளிப்படுத்தும், ஏகன் அல்லாஹ்வின் செயலாகும் இது.

## மரணத்தின் பல்வேறு பெயர்கள்

உலகிலுள்ள பல்வேறுபட்ட மதங்கள், சமயங்கள், கொள்கை கோட்பாடுகள் மரணத்தைப் பற்றி விரிவாக பேசவில்லை. ஏனெனில், பெரும்பாலோரிடம் சாவு, மரணம், இறப்பு என்பது அமங்கல, அசூசையான சொல்லாக கணிக்கப்படுகின்றன. ஒரு சில நீதி நூல்கள் மரணத்தை காரணங்காட்டி நற்செயல் செய்ய தூண்டுகின்றன. ஆனால், மரணத்தைப் பற்றிய விரிவுரைகள், தெளிவான விளக்கங்கள் இல்லை.

அகில உலக மக்கள் அனைவருக்கும் (ஹு தன்) நேர்வழி காட்டியாகவும், (ரஹ்மத்) அருட்கொடையாகவும் அல்லாஹ்வினால் அருளப்பட்ட இறுதி வேதம் அல்குர்ஆனும், அதனை தனது வாழ்வின் நெறிமுறையாக வாழ்ந்து காட்டிய இறுதி இறைத்தூதர் முஹம்மது(ஸல்) அவர்களின் நடைமுறையும் - ஹதீஸு ம் - நாமனைவரும் சந்திக்கவுள்ள மரணத்தைப் பற்றி தெளிவுபடுத்தியுள்ள அளவு வேறு எந்த கோட்பாடும், மதமும், சமயமும் தெளிவுபடுத்தவில்லை என்பது நிச்சயம்.

நாம் சாவு, இறப்பு, மரணம் என்று அழைப்பதை அல்குர்ஆன் நபிமொழிகள் பற்பல சொற்கள் மூலம் அதன் உண்மை நிலையை நமக்கு தெளிவாக்குகின்றன:

1. அல்மவ்த் - இறப்பு, மரணம்
2. அல் அஜல் - கெடு,தவணை, மணித்துளி
3. அல் ஸாஅத் - (இறுதி) நேரம்
4. அல் வஃபாத் - நிச்சயிக்கப்பட்டது, தீர்மானிக்கப்பட்டது
5. அல் யகீன் - உறுதியானது
6. அஸ் ஸாம் - சாவுக்கு இட்டுச் செல்லும் கொடிய வேதனை

இச்சொற்களில் முதல் நான்கு சொற்களை பின்வரும் செய்திகளின் ஆதாரங்களில் நிதர்சனமாகக் காணலாம். 5-வது சொல்லான “அல் யகீன் திருமறை குர்ஆனில் இடம் பெற்றுள்ளது.

உமக்கு உறுதியானது (மரணம்) வரும் வரை உமது இரட்சகனை வணங்குவீராக!

(நபிக்கே இடப்பட்ட கட்டளை) (அல்குர்ஆன் 15:99)

மறுமையில் பாவிகள் புலம்புவதைப் பாரீர்:

உறுதியானது (மரணம்) எங்களிடம் வரும் வரையில் நாங்கள் இந்த நியாயத் தீர்ப்பு நாளை பொய்யாக்கினோம் அல்குர்ஆன் 74:46, 47

இவ்விறை வசனங்களில் இடம் பெறும் “அல் யகீன் (உறுதியானது) என்ற அரபிச் சொல் உறுதியாக யாவரும் சந்திக்கவுள்ள மரணத்தைக் குறிக்குமென நபி(ஸல்) அவர்கள் விளக்க மளித் துள்ளார்கள். அறிவிப்பவர்: சாலிம் பின் அப்தில்லாஹ் பின் உமர்(ரழி), இம்ராம் பின் ஹு சைன்(ரழி)ஆதாரங்கள்: புகாரி: ர.அ. : 4706

6வது சொல்லான “அஸ்-ஸாம் (கொடிய வேதனையுடனான சாவு) என்ற பெயர்ச்சொல் திருகுர்ஆனில் இடம் பெறவில்லை. ஆனால் அதன் வினைச் சொல்லிலான சொற்கள் குர்ஆனில் “யஸீமுஹு ம் (7:167) “யஸீமுக்கும் (2:49, 7:141, 14:6) இடம் பெற்றுள்ளன. அவை “சாவுக்கு நிகரான கொடிய வேதனையின் பொருளைத் தருவதைக் காணலாம்.

நபி(ஸல்) அவர்கள் “அஸ்-ஸாமும் என்ற சொல்லுக்கு கொடிய வேதனையுடனான சாவு, மரணம் என்ற பொருட்பட அறிவுரைப் பகர்ந்திருப்பதைக் காணலாம்.

கருஞ்சீரக விதையில் “ஸாமைத் தவிர மற்ற எல்லா நோய்களுக்கும் நிவாரணம் உள்ளது.

“அஸ்-ஸாமு என்றால் என்ன? என வினவப்பட “மரணம் என விடைப் பகர்ந்தார்கள்.

அறிவிப்பு: காலித் பின் ஸஅத்(ரழி), அபூஹு ரைரா(ரழி) ஆதாரங்கள்: புகாரீ: ர.அ. 5687,5688, முஸ்லிம்: ஆ.மொ: 5489, 5490, திர்மிதி: 1964 இப்னுமாஜா: 3438, 3440 முஸ்னது அஹ்மது: 6986, 7242, 7317, 8161, 8695, 9107, 9177, 9665, 9892, 10146, 10217, 10525, 23916, 23980

“அஸ்-ஸாமும் என்ற சொல்லுக்கு “கொடிய வேதனை யுடனான இறப்பு, சாவு என்ற பொருள் என்பதை அன்றைய அரபிகளும் குறிப்பாக யூத அரபிகள் அறிந்து வைத்திருந்தனர் இதனை கீழ் காணும் நபிமொழி உறுதி செய்கிறது.

யூதர்கள் உங்களுக்கு சலாம் சொன்னால் அவர்களில் சிலர் “அஸ்-ஸாமு அலைக்கும் (உங்கள் மீது கொடிய வேதனையுடனான சாவு நிகழட்டும்) என்றே கூறுவர். ஆகவே, (அவர்களுக்கு பதிலாக) “வ அலைக்கம் (அவ்விதமே உமக்கும் நிகழட்டும்) என்று பதில் சொல்க! அறிவிப்பவர்: இப்னு உமர்(ரலி)

ஆதாரங்கள்: புகாரி, ர.அ. 6257, முஸ்லிம்: ஆ.மொ.: 5382, அபூதாவூத்: ஆ.மொ: 3ழ ழ5187, 5188: திர்மிதி, 2844, நஸயீ, இப்னு மாஜா, அஹ்மது: 4335, 4469, 4470, 5668

நபி(ஸல்) அவர்களின் மீது கடும் கோபம் கொண்டிருந்த அன்றைய யூதர்கள் “அஸ்ஸலாமு அலைக்கும் (உங்கள் மீது சாந்தி, சமாதானம் நிழவுவதாக!) என முகமன் கூறுவதற்கு பதிலாக “அஸ்-ஸாமு அலைக்கும் (உங்கள் மீது கொடிய வேதனையுடனான சாவு நிகழட்டும்) என்பதில் ‘அஸ் ஸாமு‘ சாவு என்பதை உபயோகித்து சபிக்க அவ்விதமே அவர்களுக்கும் நிகழ்வதாக! என, நபி(ஸல்) அவர்கள் பதிலளித்துள்ளார்கள்.

### பரம இரகசியம்: மரணம்

நித்ய ஜீவனான, மரணமற்ற ஏகன் அல்லாஹ்வினால் படைக்கப்பட்ட அனைத்து படைப்புகளின் இறுதி காலத்தை, நேரத்தை அவனே நிர்ணயித்து அவனையன்றி எவரும் அறியாத நிலையில் இரகசியமாக வைத்துள்ளான். பகுத்தறிவு மனிதர்களாகிய நாம் ஒவ்வொன்றின் ஆரம்பம், பிறப்பு காலத்தை ஓரளவு கணித்து தோராயமாக (நுணுக்கமாக அல்ல) கூற முடியும். ஆனால், அவற்றின் இறுதி, மரண காலத்தை தோராயமாகக் கூட கூற முடியாது. கணப்பொழுதில் அழிந்து விடவும் மரணத்தைத் தழுவி விடவும் முடியும். இதனை அனுபவப்பூர்வமான பகுத்தறிவு, அறிவியல் ரீதியாகவும் நாம் விளங்கலாம்.

பயிரிடுகிற விவசாயி நிலத்தை உழுது, செம்மைப்படுத்தி வித்திடுகிறான். அவனால் ஓரளவு தோராயமாக அவன் போட்ட வித்து, விதை எப்போது முளைக்கும் எனக் கூற முடியும். சூழ் கொண்ட பெண்மணி, தான் எப்போது குழந்தையைப் பெற்றெடுப் போம் என்பதை ஓரளவு தோராயமாக அறியமுடியும். இதனடிப் படையிலேயே மருத்துவர்களும் கணித்துக் கூறுவதைக்

காணலாம். ஆனால், (முடிவை) மரணத்தை தோராயமாகக் கூட கூற முடியாது. இது ஏகனின் இரகசியம்.

அறிவியல்ரீதியாக ஒவ்வொரு படைப்பினத்தின் சராசரி ஆயுள் காலத்தைக் கணக்கிட்டு விஞ்ஞானிகள் கூறுவதைக் காணலாம். இறுதித்தூதர் முஹம்மத்(ஸல்) அவர்கள் இன்றைய மனித இனத்தின் சராசரி ஆயுள் காலத்தையும் இறையருளால் கணித்துச் சொன்னார்கள்.

எனது சமுதாயத்தின் (சராசரி) வயது அறுபது வருடங்களிலிருந்து எழுபது வருடங்கள் வரையாகும். அறிவிப்பவர்: அபூஹு ரைரா (ரலி)

ஆதாரங்கள்: திர்மிதி 2253, இப்னுமாஜா: 4226

இதனடிப்படையில் நபி(ஸல்) அவர்கள், அவருடைய அன்புத்தோழர்கள் அபூபக்கர், உமர், அலி(ரழி அன்கும்) போன்றோர் 60 முதல் 63 வயதில் மரணித்தார்கள். உஸ்மான்(ரழி) அவர்கள் 88 ஆண்டுகளும் ஹனஃபி இமாம் அபூஹனீஃபா(ரஹ்-ஹி80-150) 70 ஆண்டுகளும், ஹம்பளி-(ரஹ்- ஹி164-243) 79 ஆண்டுகளும், ஷாபிஈ (ரஹ் - ஹி150 - 204) 54 - ஆண்டுகளும், மாலிம்(ரஹ் - ஹி93-179) 86ஆக விதிவிலக்காக வாழ்ந்துள்ளனர். இதனடிப்படையில் விதிவிலக்கை தவிர்த்து, சராசரி 60 (அறுபது) ஆண்டை வைத்து இன்று அகில உலகளவில் ஓய்வு காலத்தை (Retirement age) கணித்திருப்பது கவனிக்கத்தக்கது.

இவையனைத்தும் சராசரி அளவுகோளாகும். எந்த ஒரு உயிரும் எப்போது, எங்கு எப்படி மரணிக்கும் என்பது துல்லியமாக எவராலும் கணிக்க முடியாது கூறவும் முடியாது. ஏகன் அல்லாஹு வின் நேரடி கட்டுப்பாட்டிலுள்ள இந்த இரகசியம் எவரும் அறியாதது. இதனை திருகுர்ஆன் பல வழிகளில் தெளிவு படுத்துவதைப் பாரீர்:

திறைமறைக்குர்ஆன் கூறுகிறது:

“எந்த ஆன்மாவும் (முன்னரே) விதிக்கப்பட்டிருக்கும் தவணைக்கும் இணங்க அல்லாஹ்வின் அனுமதியின்றி மரணிப்பதில்லை. அல்குர்ஆன் 3:145

“ஒரு குறிப்பிட்ட தவணைவரை அவன் உங்களுக்கு அவகாச மளிப்பான் நிச்சயமாக அல்லாஹ்வின் தவணை வரும் போது அது பிற்படுத்தப்படமாட்டாதும். அல்குர்ஆன் 14:10

“ஒவ்வொரு கூட்டத்தாருக்கும் (வாழ்வுக்கும், வீழ்வுக்கும்) ஒரு காலக்கெடு உண்டு அவர்களது கெடு வந்து விட்டால் அவர்கள் ஒரு கணப்பொழுதும் பிந்தவும் மாட்டார்கள் முந்தவும் மாட்டார்கள்ம். அல்குர்ஆன் 7:34, 10:49

“தான் எந்த பூமியில் (எப்போது, எப்படி) இறப்போம் என்பதையும் எவரும் அறிவதில்லை. நிச்சயமாக அல்லாஹ் தான் நன்கறிந்தவன் அறிவிப்பவன். அல்குர்ஆன் 31:34

(இறுதி) நேரத்திற்குரிய ஞானம் அவனுக்கே உரியது. அல்குர்ஆன் 41:47

### மரணத்தின் திடீர் வருகை

ஒவ்வொருவரும் சந்திக்கவுள்ள, ஏகனால் நிச்சயிக்கப்பட்ட மரணம் எப்போது வரும் என்பதை நாம் அறிய முடியாவிட்டாலும் எப்படி வரும் என்பதை அனைத்தின் முடிவைக் கூறுவதன் மூலம் நம் ஒவ்வொருவரின் முடிவையும், இறப்பையும் நமக்கு அல்லாஹ் தெளிவுபடுத்துகிறான்.

அந்நேரத்தைப் பற்றி மக்கள் உம்மிடம் வினவுகிறார்கள். “அதைப் பற்றிய ஞானம் அல்லாஹு விடமே உள்ளதும் என்று நீர் கூறுவீராக! அல்குர்ஆன் 33: 63

அது சமீபத்திலும் வந்து விடலாம் என்பதை நீர் அறிவீரா? அல்குர்ஆன் 33:63, 42:17

அந்நேரம் அவர்களிடம் திடீரென வரும். அல்குர்ஆன் 22:55

தங்களால் உணர முடியாத நிலையில் திடீரென இவர்களுக்கு இவ்(விறுதி) வேளை வருவதைத் தவிர, (வேறெதையும்) இவர்கள் எதிர்ப்பார்க்கிறார்களா? அல்குர்ஆன் 43:66, 47:18

மேலும், வானங்களிலும், பூமியிலுமுள்ள இரகசியம் அல்லாஹ்வுக்கே உரியது எனவே, அவ்(விறுதி) வேளையின் விஷயம் இமை கொட்டி விழிப்பது போல் அல்லது (அதை விட வெகு) சமீபத்தில் இல்லாமலில்லை. அல்குர்ஆன் 16:77

இவ்விறை வசனங்கள் மூலம் உலக முடிவே மிகவும் சமீபத்தில், இமை கொட்டி விழிப்பது போல் அல்லது அதைவிட வெகு அருகில் இருப்பதை அறிய முடிகிறது. நாம் சிறிதும் உணரமுடியாத வேகத்தில் திடீரென வந்து தாக்கும் என்பதையும் அறியலாம்.

இதனை நபி(ஸல்) அவர்கள் சிறு பிள்ளையும் விளங்கும் விதமாக தனது ஆட்காட்டி விரலையும், நடுவிரலையும் இணைத்துக் காட்டி "நானும், உலக முடிவு நாளும் மிகவும் இணைந்திருப்பதாக அடுத்தடுத்து இடைவெளியின்றியிருப்பதாக பாலப் பாடமாக போதித்துச் சென்றார்கள்.

அறிவிப்பு: ஸஹல் பின் ஸஅது, அனஸ், அபூஹுரைரா(ரழி - அன்கும்)

ஆதாரங்கள்: புகாரி, ர.அ. 4936, 5301, 6503, முதல் 6505 முஸ்லிம் ஆ.மொ. 7044 முதல் 7048 தாரமி: 2641 இப்னு மாஜா: 4030 அஹ்மது 11797, 11873, 11884, 12540, 12810, 12841, 12857, 12998, 13399, 13440, 13503, 21731, 21743, 21767, 21792.

ஒட்டு மொத்த உலக முடிவே மிக அருகிலிருக்கிறது என்றால், நம் ஒவ்வொருவரின் முடிவு - மரணம் அதைவிட அருகாமையில், அடுத்த நொடியில் உள்ளது நாம் எதிர்பாராத நிலையில் திடீரென தாக்கும் என்பதை விளங்கலாம். அந்நினைப்பு நம் வாழ்வின் ஒவ்வொரு நொடியும் இருக்க வேண்டும்.

## பிறப்பு, இறப்பு நம் விருப்பத்திலில்லை

மனிதனின் ஆரம்பமான அவனுடைய பிறப்பு அவனுடைய விருப்பு, வெறுப்புக்கிணங்க அமைவதில்லை. அரசனைப் பார்த்து தானும் அரசனாக பிறந்திருக்கலாமே என நினைக்க முடியாது. ஏழை, பணக்காரன் அறிவாளி, அறிவிலி முதலாளி, தொழிலாளி உயர்ந்த குலம், தாழ்ந்த குலம் இனம், மொழி, நாடு, என்ற பாகுபாடு பார்த்து பிறக்கவும் முடியாது. அவரவர் தாய், தந்தையரின் மோக வேகத்தில் தாம்பத்ய உறவில் பிறக்கிறோம் அதாவது அவரவர் விருப்பு, வெறுப்புக் கிணங்க நம்முடைய பிறப்பு அமையவில்லை.

அதைப்போல நம்முடைய முடிவான இறப்பும் நம்முடைய விருப்பு, வெறுப்புகிகிணங்க அமையப் போவதில்லை. எங்கே, எப்போது, எப்படி நாம் மரணிப்போம் என்பதை நம்மால் இம்மியளவும் கணித்துக் கூற முடியாது. அது அல்லாஹ் மட்டும் அறிந்த பரம ரகசியம் என்பதை நாம் அறிவோம். இருப்பினும் ஒரு நாள் மரணித்தே ஆக வேண்டும். மரணமற்ற சாகாவரம் பெற்றவர் எவருமுண்டோ? இல்லை. இல்லவே இல்லை.

அல்லாஹ் அவனுடைய அருள் மறையில் கூறுகிறான்:

உமக்கு முன்னர் எந்த மனிதருக்கும் (அவன் - அல்லாஹ்) என்றென்றும் வாழக்கூடிய நித்திய வாழ்வை நாம் (இங்கு) கொடுக்கவில்லை. ஆகவே, நீ மரித்தால் அவர்கள் மட்டும் என்றென்றும் வாழப் போகிறார்களா? அல்குர்ஆன் 21:34

இவ்வுலகில் எவரும் நிரந்தரமாக வாழ முடியாது என்பது இவ்விறை வசனப்படி உண்மையானால், இவ்வுலக வாழ்வின் முடிவை - மரணத்தை நாம் சந்தித்தே ஆக வேண்டும். சாவு, இறப்பு, மரணம் அனைவருக்கும் நிச்சயிக்கப்பட்டது தீர்மானிக்கப்பட்டது உறுதியானது என்பதை உணர வேண்டும். இதனை அழுத்தம் திருத்தமாக அல்லாஹ்வின் அருள் மறை கூறுவதைக் காணீர்:

ஒவ்வோர் ஆத்மாவும் மரணத்தைச் சுவைத்தே ஆக வேண்டும் பின்னர் நீங்கள் நம்மிடமே மீட்கப்படுவீர்கள். அல்குர்ஆன் 29: 57

ஒவ்வோர் ஆத்மாவும் மரணத்தைச் சுவைக்கவே உள்ளன் தேர்வுக்காக நன்மை, தீமைக் கொண்டு நாம் உங்களைச் சோதிக்கிறோம். பின்னர், நம்மிடமே நீங்கள் மீட்கப் படுவீர்கள். அல்குர்ஆன் 21:35

ஒவ்வோர் ஆத்மாவும் மரணத்தைச் சுவைத்தே ஆக வேண்டும் அன்றியும், மறுமை நாளில் தான் உங்க(ள் செயல் க)ளுக்குரிய பலாபலன்கள் முழுமையாக வழங்கப்படும். அல்குர்ஆன் 3:185

பெரும்பாலோர் மரணம் மனித வாழ்வின் முடிவு என நினைக்கின்றனர். ஓரிறைக்கொள்கையோ, பலதெய்வக் கொள்கையோ கொண்ட மதவாதிகளில் கிறித்துவர்கள் பாவத்தின் சம்பளம் மரணம் (பைபிள்: ரோமர் 6:23) என்கின்றனர். அவரவர் செய்யும் செயல்களுக்கொப்ப ஜன்மம், பிறவியின் முடிவு மரணம் என்பது வர்ணாசிரம தத்துவத்திலான இந்து மதக் கொள்கை (சாந்தோக்யோ உபநிஷத் 5:10:7)

மரணத்திற்குப்பின் ஒரு நித்ய வாழ்வு உண்டென்றும், இவ்வுலக வாழ்வில் நாம் செய்த நல்ல, தீய செயல்களுக்கொப்ப சுவர்க்கம், நரகம் கொடுக்கப்படுவோம் என்பது இந்தியாவின் பூர்வீக வைதீக ரிஷிகளின் கோட்பாடு (ஈஷாவாஸ்யோ உபநிஷத்:3) இதேகருத்தினை தெள்ளத்தெளிவாக இஸ்லாம் கூறுகின்றது.

இவ்வுலக வாழ்வு, நாம் நல்லவரா, தீயவரா என்பதை நம் செயல்கள் மூலம் பரீட்சிக்கும் பயிற்சிக்கூடம் நிரந்தரமற்ற குறுகிய வாழ்வு. மரணம் இப்பயிற்சிக் கூடத்தில் செயல்களின் முடிவைக் காணப்போகும் பயணத்தின் ஆரம்பம். இக்குறுகிய வாழ்விற்கான முடிவு நம்முடைய செயல்களின் பலாபலன்களைக் காணப்போகும் மறுமைக்கான ஆரம்பம் நிரந்தரமற்ற வாழ்(தாருல் ஃபனா)விலிருந்து நித்ய வாழ்(தாருல் பஃகா)விற்கான பயணமெனக் கூறுகிறது இஸ்லாம்.

அல் அஜல் (கெடு) எப்போது தீர்மானிக்கப்பட்டது?

நாம் நிச்சயமாக சந்திக்கவுள்ள, நாம் எதிர்பாராத நிலையில் நம்மை தாக்கவுள்ள நம்முடைய இவ்வுலக முடிவு - மரணம் நாம் இவ்வுலகில் பிறப்பதற்கு முன்பே அல்லாஹ்வினால் தீர்மானிக்கப் பட்டது என்பதை இஸ்லாம் தெளிவாக்குகிறது.

மனிதகுலத்தின் ஆதிமனிதர் ஆதம்(அலை) அவர்கள் தாய், தந்தையின்றி ஏக இறைவனால் களிமண்ணிலிருந்து படைக்கப் பட்டவர் என்பதை யாவரும் நன்கறிவர். ஆதிமனிதர் ஆதம்(அலை) அவர்கள் படைக்கப்பட்டபோதே மனித குலத்தின் அனைத்து மக்களின் (அர்வாஹ்) உயிர்களையும் அவருடைய முதுகில் வைத்திருந்ததாக அல்லாஹ் அவனுடைய இறுதி வேதத்தில் 7:172வது வசனத்தில் குறிப்பிடுகின்றான். ஆதம்(அலை) அவர்களின் முதுகிலிருந்து அனைவரையும் வெளியாக்கி, அவர்களை தங்களுக்கே சாட்சியாக்கி, தன்னை "ஏக இரட்சகன் என சொல்ல வைத்ததாகவும் இன்று இவ்வுலக வாழ்வில் அவர்கள் நினைவூட்டப் படாததால் ஏகத்துவ ஓரிறைக் கொள்கையில் தாங்கள் பாரா முகமாக இருந்ததாகவும் விவரிக்கிறான்.

அன்று களிமண்ணிலிருந்து படைக்கப்பட்ட ஆதத்தின் முதுகிலிருந்து நாம் வெளிப்பட்டிருக்கிறோம் என்பதை நினைவில் நிறுத்தி பின்வரும் இறைவாக்கைக் கவனியுங்கள்.

திருகுர்ஆன் கூறுகிறது:

அவன் தான், உங்களை களிமண்ணிலிருந்து படைத்து, பின்னர் (உங்களுக்கான ஒரு) தவணையும் ஏற்படுத்தி யுள்ளான் மேலும் (உங்களைக் கேள்வி கணக்கிற்கு எழுப்புவதற்காகக்) குறிக்கப்பட்ட தவணையும் அவனிடமே உள்ளது அப்படியிருந்தும் நீங்கள் சந்தேகப்படுகிறீர்கள். அல்குர்ஆன் 6:2

ஆதிமனிதர் ஆதம்(அலை) அவர்களை மண்ணிலிருந்து படைத்து, அவருடைய முதுகிலிருந்து வெளியாக்கிய அன்றே நம்முடைய காலக்கெடு (அஜல்) ஏகன் அல்லாஹ்வினால் தீர் மானிக்கப் பட்டிருப்பதை அறியலாம். பொதுவாக அனைவருக்கும் தனித் தனியாக அவரவருக்குரிய காலக்கெடுவை (அஜலை) அன்றே ஏற்படுத்தியிருப்பதையும் குறிப்பிடுகிறான்.

ஒவ்வொரு தவணைக்கும் ஒரு (பதிவு) ஏடு உள்ளது. அல்குர்ஆன் 13: 38

அவர்களுக்கு ஒரு குறிப்பிட்ட தவணையையும் ஏற்படுத்தி யிருக்கிறான். அதில் சந்தேகமில்லை. அல்குர்ஆன் 17:99

இவ்விறை வசனங்கள் மூலம் நாம் இவ்வுலகில் பிறப்பதற்கு பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன் ஆதம்(அலை) அவர்களை படைத்தபோதே மனித இனத்தின் அனைவரின் காலக்கெடு (அஜல்) தவணை முழுமையாக ஏகவல்லோனால் ஐயம் திரிபுற தீர்மானிக்கப் பட்டு விட்டது. பின் நம்முடைய பிறப்பின் போது அவரவர் காலக்கெடு - அஜல் - தனித்தனியாக அவனுடைய தாயின் கருப் பையில் எழுதப்படுகிறது.

“நாம் நிச்சயமாக உங்களை (ஆதியில்) மண்ணிலிருந்தும், பின்னர் இந்திரியத்துளியிலிருந்தும் பின்னர் தொங்கு நிலை யிலுள்ள அலக்கிலிருந்தும், பின்பு உருவாக்கப்பட்டதும், உருவாக்கப்படாததுமான தசைக் கட்டியிலிருந்தும் படைத்தோம். உங்களுக்கு விளக்குவதற்காகவே (இதனை விவரிக்கிறோம்). மேலும், நாம் நாடியவற்றை ஒரு குறிப்பிட்ட காலம் வரை கர்ப்பையில் தங்கச் செய்கிறோம். பின்பு, உங்களை குழந்தைகளாக வெளிப்படுத்துகிறோம் பின்பு நீங்கள் உங்கள் வாலிபத்தை அடையும்படிச் செய்கிறோம் அன்றியும் (இதனிடையில்) உங்களில் மரிப்பவர்களும் உண்டும். அல்குர்ஆன் 22:5

இவ்விறை வசனத்திற்கு விளக்கமளித்த இறைத்தூதர் முஹம்மதுநபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்:

“உங்கள் படைப்பு உங்கள் தாயின் வயிற்றில் நாற்பது நாட்களில் (விந்தின் நிலையில்) ஒருங்கிணைக்கப்படுகிறது. பிறகு அதே காலக்கட்டத்தில் (40 நாட்களில்) தொங்குபடியான அட்டை (அலக்கு)யாக மாறுகிறது பிறகு அதே காலக் கட்டத்தில் (40 நாட்களில் அறைகுறையாக சுவைக்கப்பட்ட சக்கை போன்று) சதைப் பிண்டமாக பரிணமிக்கிறது பிறகு அல்லாஹ் ஒரு வானவரை (அதனிடம்) அனுப்ப நான்கு ஆணைகள் பிறப்பிக்கப் படுகின்றன: அவையாவன:

1. அவனுடைய செயல் (அமல்)
2. அவனுடைய (வாழ்விற்கான) வாழ்வாதரங்கள் (ரிஜ்க்)
3. அவனுடைய வாழ்வின் கெடு (அஜல்)
4. அவன் நல்லவனா? தீயவனா? என்பதையும்

(நான் விதித்தபடி) எழுது என்று அவ்வானவருக்கு கட்டளையிடப்படும். பிறகு அதனுள் உயிர் (ரூஹ்) ஊதப்படும்.

அறிவிப்பவர்: அப்துல்லாஹ் பின் மஸ்வூது(ரழி)

ஆதாரங்கள்: புகாரி, ர.அ. 3208, 3332, 3333, 6595, 7454 முஸ்லிம்: ஆ.மொ. 6390: அபூதாவுத்: ஆ.மொ. : 4691 திர்மிதி: 2063, இப்னுமாஜா: 73 முஸ்னது அஹ்மது: 3372, 3441, 3738,3882

இந்நபி மொழியின் கடைசி வாசகத்தைப் பாரீர்: நாம் நம்முடைய தாயின் கருவறையில் முதல் 40 நாட்கள் விந்தாக இருந்து பின் அடுத்த 40 நாட்கள் தொங்கும் அட்டைப் போன்ற நிலையை அடைந்து பின் அடுத்த 40 நாட்கள் அறைக்குறையாக சுவைக்கப் பட்ட தசைப் பிண்டமாக மாறியிருக்கையில் நம்முடைய இவ்வுலக வாழ்வில் செய்யவிருக்கும்: 1. செயல்பாடுகள் அதற்கான 2. வாழ் வாதாரங்கள் இவ்வாழ்வின் 3. முடிவு - மரணம் நம்முடைய இவ்வுலக வாழ்வில் பெறும் 4. பாக்கியம், துர்பாக்கியம் வரையறுக் கப்பட்ட பின் தான் உயிர் (ரூஹ்) ஊதப்படுகிறது. அதாவது நம் முடைய பிறப்பிற்கு முன்பே, உயிர் கொடுக்கப் படுவதற்கு முன்பே நம்முடைய மரணம் தீர்மானிக்கப்பட்டு விட்டது என்பதை உணர முடிகிறது.

### நிச்சயிக்கப்பட்டது நிழலாக தொடரும்

நம்முடைய பிறப்பு நம்முடைய விருப்பு, வெறுப்பிற்கிணங்க அமையவில்லை. நம்முடைய இறப்பும் நம்முடைய விருப்பு வெறுப்பிற்கிணங்க அமையப்போவதில்லை. அதாவது நம்முடைய இவ்வுலக வாழ்வின் ஆரம்பமும், முடிவும் நம்முடைய விருப்பு, வெறுப்பிற்கிணங்க இல்லை. நம்முடைய கட்டுப்பாட்டில் இல்லை. ஆனால், இவ்வுலக வாழ்வில் நாம் நினைப்பது அனைத்தும் நம்முடைய விருப்பப்படி நடக்கவேண்டுமென விரும்புகிறோம். நம்முடைய எண்ணம், சொல், செயல், நம்முடைய மனைவி, மக்கள், உற்றார் உறவினர்கள், அதைச் சார்ந்த சுற்றுப்புற சூழல்கள், நிகழ்வுகள் அனைத்தும் நம்முடைய விருப்பு, வெறுப்பிற்கிணங்க நிகழவேண்டும் அமைய வேண்டுமென ஆசிக்கிறோம் அதற்கான முயற்சிகளில் மும்முரமாக ஈடுபடுகிறோம்.

நம்முடைய இவ்வுலக வாழ்விற்கான வாழ்வாதாரங்களான பொன், பொருள், துணைவன், துணைவி, இடம், உணவு அனைத்தும் நம்முடைய தாயின் கருப்பையில் ஏக வல்லோனால் நிர்ணயிக்கப் பட்டிருந்தாலும், அதனை செம்மையாக, முழுமையாக அடைய வேண்டிய எல்லா முயற்சிகளையும் மேற்கொள்கிறோம். அனைத்து உத்திகளையும் பிரயோகித்து பெற முயற்சிக்கிறோம். வாழ் வாதாரங்கள் எவ்வளவு, எங்கு, எப்படி, எப்போது கிடைக்கு மென தெள்ளத்தெளிவாக அறியாத நிலையிலும் அதனைப் பெற்று நம்முடைய இவ்வுலக வாழ்வில் சுகபோகத்துடன் வாழ ஆசைப்படுகிறோம். அதற்காக முழு முயற்சியில் கடுமையாக உழைக்கிறோம். தனது எல்லா ஆசைகளும், தேவைகளும் முழுமையாக பூர்த்தியாக வேண்டும் என ஒவ்வொரு மனிதனும் விரும்புகின்றான். அதனை நிறைவேற்ற தனது உதிரத்தை வேர்வையாக்கி உழைக்கிறான். இவையனைத்தும் தனது விருப்பப்படி நடக்க வேண்டுமென முயற்சிக்கிறான். ஆனால், இவ்வுலக வாழ்வின் முடிவில் நாம் நிச்சயம் மரணத்தை சந்தித்தே ஆகவேண்டுமென்பதை சிறிதும் நினைப்ப தில்லை. மாறாக மரணம், இறப்பு, சாவு என்பதை அசூசையாக, அபச்சாரமாக, தீயதாகவே மதிக்கிறான்.

இவ்வுலகில் நமக்கு கிடைக்கும் வாழ்வாதாரங்கள் நல்லதா? கெட்டதா? அதன் விளைவுகள் என்ன? என்பதை அறியாத மனிதன் அதனை முழுமையாக பெற முயற்சிக்கிறான். ஆனால், நம்முடைய இறுதி முடிவு, மரணம் நல்லதாக அமைய வேண்டும் என்பதை சிந்திப்பதே இல்லை. மனிதனின் இவ்வுலக வாழ்வின் முடிவான மரணத்தை தன் கட்டுப்பாட்டில் கொண்டு வரவோ, அதனைத் தடுத்து நிறுத்தவோ, ஏன்? சிறிது கால தாமதம் செய்யவோ முடியாது.

ஏகனால் என்றோ நிச்சயிக்கப்பட்ட மரணம் நொடி பொழுதில், நாம் எதிர்பாராத நிலையில் நம்மை சந்திக்கும். திடீரென தாக்கும். உலக இச்சைகளில் மூழ்கி திளைக்கும் மனிதன், மரணத்தைக்

கண்டு பயப்படுகிறான் விரண்டோடுகிறான். நம்மால் மரணத்தி லிருந்து தப்பிக்கவே முடியாது. இதனையும் அல்லாஹ் படம் பிடித்துக் காட்டுவதைப் பாரீர்:

“நீங்கள் எதை விட்டும் விரண்டோடுகிறீர்களோ, அந்த மரணம் நிச்சயமாக உங்களை சந்திக்கும் எனக் கூறுவீராக! அல்குர்ஆன் 62:8

“மரணத்தை விட்டோ, கொல்லப்படுவதை விட்டோ நீங்கள் விரண்டோடினீர்களாயின் அவ்வாறு விரண்டோடுவது உங்களுக்கு யாதொரு பலனும் அளிக்காது. அது சமயம் வெகு சொற்பமேயன்றி (அதிக) சுகமனுபவிக்க மாட்டீர்கள் என நீர் கூறுவீராக! அல்குர்ஆன் 33:16

கல்லுக்குள் துளை செய்து தேரைப் போல் வாழ்ந்தாலும்: கருங்கல் கோட்டைக்குள் நுழைந்து கொண்டாலும் மரணம் விடாது

உன்னை மலக்கல் மவ்த் (வானவர்) மறந்து விடுவதில்லை இதனை எவரும் சிந்திப்பதில்லை. இதே கருத்தினை இறைமறை இயம்புவதைக் காணீர்:

“நீங்கள் எங்கிருந்த போதிலும் உங்களை மரணம் அடைந்தே தீரும் நீங்கள் மிகவும் உறுதியாகக் கட்டப்பட்ட கோட்டைகளில் இருந்தபோதிலும் சரியே! அல்குர்ஆன் 4:78

ஒருவரை மரணம் சந்திக்கின்ற போது, அதனை ஏற்க மறுத்து அதற்கு பகரமாக பூமி நிறைய தங்கத்தையே ஈடாக கொடுத்தாலும் ஏற்கப்படமாட்டாது. அவனுடைய காலக்கெடு, வாழ்வின் தவணை முடிந்துவிட்டது என, உயிர் பிடுங்கப்படும். (அல்குர்ஆன் 3:91) என்பது இறைவனின் நியதியாகும். இதிலிருந்து மனித இனத்தில் உயர்ந்தவர்களான நபி (இறைத்தூதர்)கள் கூட விதிவிலக்கல்ல:

## மரண முன் அறிவிப்பு உண்டா?

இவ்வுலக வாழ்வில் மயங்கி, பிரிய மனமின்றி மரணத்தைக் கண்டு, மனித இனம் பெரும்பாலும் பயப்படுகிறது. நிச்சயிக்கப் பட்ட உண்மையை - மரணத்தை, நிரந்தரமான மறுமை வாழ்வுக்கு இட்டுச் செல்லும் பயணத்தைக் கண்டு மனிதன் விரண்டோடு கிறான். இருப்பினும் அவரவருக்குரிய கெடு (அஜல்) வந்ததும் சாவை சந்தித்தே ஆகவேண்டும். தப்பிக்க முடியாது. மரணமும் எவ்வித முன் எச்சரிக்கையும் செய்யாமல் திடீரென வரும். ஆனால், இறைத் தூதர்கள் மட்டும் இதில் விதிவிலக்கு.

நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்:

சுவனத்தில் தம் இருப்பிடத்தைப் பார்த்து (இன்னும் சிறிது காலம் இவ்வுலகில்) வாழ வாய்ப்பளிக்கப்படாத வரையில் அல்லது (இம்மை, மறுமை இரண்டில் ஒன்றைத்) தேர்வு செய்ய வாய்ப்பளிக்காத வரையில் எந்த இறைத்தூதரின் உயிரும் பறிக்கப் படுவதில்லை. அறிவிப்பாளர்: அன்னை ஆயிஷா(ரழி)

ஆதாரங்கள்: முஅத்தா 559, புகாரி: ர.அ. 4435, 4437, 4463, 4586, 6059, முஸ்லிம்: ஆ.மொ. 5988, 5990, இப்னுமாஜா : 1609, அஹ்மது: 24262, 24519, 25115, 25142

எந்த இறைத்தூதரும் மரணத் தருவாயில் (இம்மை, மறுமை இரண்டில் ஒன்றைத்) தேர்வு செய்யும் வாய்ப்பளிக்கப்படாத வரையில் மரணிக்கவில்லை. ரசூல்(ஸல்) அவர்கள் “என்னை உயர்வான தோழர்களுடன் சேர்த்தருள் எனப் பிரார்த்தித்ததை செவியுற்றேன். நபியவர்கள் நம்மைவிட்டு பிரியப்போகிறார்கள் என்பதை அறிந்து கொண்டேன். அறிவிப்பு: அன்னை ஆயிஷா(ரழி)

ஆதாரம்: முஅத்தா 559, புகாரி ர.அ.: 4435, 4437, 4586, 6348, முஸ்லிம்: ஆ.மொ. 5988, 5990 அஹ்மது: 24262, 24519, 25115, 25142

இந்நபி மொழிகளின் மூலம் மனித குலத்தில் அல்லாஹு வினால் தேர்வு செய்யப்பட்ட நல்லடியார்களான இறைத்தூதர்(நபி) களுக்கு மட்டும் மரணத்திற்கு முன் மரணம் வருகிறது என்ற செய்தி தெரிவிக்கப்படும். மற்றவர் எவருக்கும் அச்சலுகை இல்லை என்பது தெளிவாகிறது.

மரணச் செய்தியைக் கேட்டதன்பின், நல்லடியார்களான நபிமார்கள் மரணத்தை சந்திக்க தயாரானார்கள். நிரந்ரமற்ற இவ்வுலக வாழ்விலிருந்து நிரந்தரமான மறுமை வாழ்வின் ஆரம்பம் என எதிர்கொண்டனர். ஏனெனில், அவர்கள் ஏகனால் என்றோ நிச்சயிக்கப்பட்ட மரணத்திலிருந்து தப்பிக்கவே முடியாது என்பதை விளங்கி வைத்திருந்தனர். எனவே, மனித குலத்தில் மேலான இறைத்தூதர்களும் மரணச் செய்தி அறிவிக்கப்பட்ட பின்பும் கூட மரணத்திலிருந்து தப்பிக்க முடியாது என்பதை மூஸா(அலை) அவர்களது மரணம் நமக்கு தெளிவாக்குகிறது.

இறைத்தூதர்(ஸல்) அவர்கள் கூறினார்கள்:

“மலக்குல் மவ்த் (உயிரை பறிக்கும் வானவர்) மூஸா(அலை) அவர்களிடம் அனுப்பப்பட்டார். மூஸா(அலை) அவர்களிடம் உயிரைப் பறிக்க வானவர் வந்த போது, மூஸா(அலை) அவர்கள் அவருடைய கண் பிதுங்குமளவு முகத்தில் அறைந்து விட்டார்கள். வானவர் (மலக்கல் மவ்த்) உடனே தனது இரட்சகனிடம் திரும்பிச் சென்று ‘மரணத்தை விரும்பாத ஒரு அடியாரிடம் என்னை நீ அனுப்பி விட்டாய்‘ என முறையிட்டார் ‘என்னை அடித்து கண்ணை கலங்க வைத்து விட்டார்‘ எனக் கூறினார்.

அல்லாஹ், அவருடைய கண்ணை சரி செய்துவிட்டு, நீ திரும்பிச் சென்று அவருடைய கரத்தை ஒரு காளை மாட்டின் முதுகில் வைக்க, அவருடைய கரம் எவ்வளவு முடிகளை பிடிக்கிறதோ அதில் ஒவ்வொரு முடிக்குப் பகரமாக ஓர் ஆண்டு இவ்வுலகில் வாழ அவருக்கு அனுமதி உண்டு எனக் கூற ஆணையிட்டான். அவ்விதமே அவ்வானவர் திரும்பி சென்று மூஸா(அலை) அவர்களிடம் கூறியபோது அவர், “இறைவா! அத்தனை காலம் வாழ்ந்து முடிந்த பின் என்ன நிகழும்? என, வினவினார்கள். இறைவன் “மரணம் தான் என விடையளிக்க, மூஸா(அலை) அவர்கள், “அப்படியெனில், இப்போதே என் உயிரை எடுத்துக் கொள் எனக் கூறிவிட்டு பைத்துல் மக்திஸ் எனும் புனித பூமிக்கு நெருக்கமாக அதிலிருந்து கல்லெறியும் தூரத்தில் தனது மண்ணறை (கப்ரு) அமைந்திடச் செய்ய வேண்டினார்கள்.

அறிவிப்பவர்: அபூஹு ரைரா(ரழி)

நூல்கள்: ஸஹீஃபா ஹம்மாம் 59, புகாரி: ர.அ. 1339, 3407 முஸ்லிம்: ஆ.மொ. : 4374, 4375: நஸயீ: 2062 அபூஅவானா: 1, 188 இப்னு ஹிப்பான்: 6190, 6191 முஸ்னது அஹ்மது: 7326, 7825, 8262, 10484

உமக்கு முன்னர் எவருக்கும் இவ்வுலகில் மரணமின்றி நிரந்தரமாக வாழும் நித்திய வாழ்வை நாம் கொடுக்கவில்லை எனக்கூறும் (21:34) ஏகன் அல்லாஹ்:

“முஹம்மது(ஸல்) இறைத்தூதரேயன்றி வேறல்ல. அவருக்கு முன்னரும் (பல இறைத்)தூதர்கள் (வந்து) சென்று விட்டனர் அவர் இறந்து விட்டால் அல்லது கொல்லப்பட்டால், நீங்கள் (ஏகத்துவத்தை விட்டு) உங்கள் குதிகால்களின் மேல் (புறங்காட்டித்) திரும்பி விடுவீர்களா! அல்குர்ஆன் 3:144

“நிச்சயமாக நீரும் மரணிப்பவர் நிச்சயமாக அவர்களும் மரணிப்பவர்களே! அல்குர்ஆன் 39:30

இப்பூவுலகில் பிறந்த ஒவ்வொருவரும், அவர் இறைத் தூதராகட்டும், தீர்க்கதரிசியாகட்டும் யாராயினும் மரணத்தை சந்தித்தே ஆகவேண்டும். மரணம் நம்முடைய பிறப்பிற்கு முன்பே அல்லாஹ்வினால் நிச்சயிக்கப்பட்ட உண்மை. ஆதிமனிதர் ஆதம் (அலை) அவர்கள் முதல் இன்று வரை அன்றாடம் நடைபெற்று வரும் சத்தியம்.

மரணம் இனிமையானதல்ல! கடுமையானது கொடிய வேதனையைத் தரக்கூடியது இப்பூவுலகில் படாத கஷ்டத்தை, இன்னலை மரணிக்கின்ற நொடி பொழுதில் அனுபவிக்க வேண்டியது. இதன் சுவையை அனுபவித்தவர் எவருமில்லை. இருப்பினும், மரணவேதனையின் கடுமையை எல்லோரும் நம்புகின்றனர். எனவே மரணம், மரணச்சுவை போன்றவற்றைப் பற்றி நினைக்க, பேச விரும்பாதவன் கூட மரணத்தை சந்தித்தே ஆக வேண்டும் அதன் சுவை யைச் சுவைத்தேயாக வேண்டும். இது இயற்கையாக இறைவன் நம் மீது விதித்துள்ள கட்டாயக் கடமை.

## மரண வேதனை

மனிதன் இவ்வுலகில் தனது அன்றாட வாழ்வில் பற்பல கஷ்டங்களை, இன்னல், இடையூறுகளை சந்தித்து வருகிறான். அவற்றில் மிகவும் கடினமானது கொடியது மரண வேதனையாகும். மரண வேதனையடைந்து மரித்தவர் எவரும் திரும்பி வந்து அவருடைய அனுபவத்தை நமக்கு தெரிவித்ததில்லை. “கண்டவர் விண்டிலர், விண்டவர் கண்டிலர்“ என்பர். ஆனால், மரணவேதனை மிகவும் கடுமையானதாக இருக்கும் என்பதை எவரும் மறுப்பதில்லை.

இஸ்லாத்தில் “ஸகராத்துல் மவ்த்க் என்று அரபியில் சொல்வார்கள். “ஸகராத் என்றால், கொடிய வேதனை என்று பொருள். இச்சொல் இயற்கையான முதல் பிரசவத்தில் ஒரு பெண் மணி அனுபவிக்கும் கஷ்டத்திற்கும், மரணத்தின்போது ஒவ்வொரு வரும் அனுபவிக்கும் கஷ்டத்திற்கும் மட்டும் அரபி மொழியில் உபயோகப்படுத்தப்படுகிறது. இதன் மூலம் மரண வேதனையின் கடுமையை ஓரளவு விளங்கலாம். பிரசவ வேதனையைக் கூட பெண்களால் அனுபவிக்க முடிகிறது. ஆனால், மரணத்தின் வேதனையை அனுபவிப்பது இமாலய சாதனையாகும். இப்படிப் பட்ட கடிய கொடிய வேதனையை சந்திக்க விரும்பாமல், மனிதன் விரண்டோடவே விரும்புவான். ஆனால், தப்பிக்க முடியவே முடியாது.

திருகுர்ஆன் கூறுகிறது:

மரண வேதனை சத்தியத்தைக் கொண்டு (மெய்யாக) வருகின்றது (அப்போது அவனிடம்) நீ எதை விட்டும் விரண்டோடிக் கொண்டிருந்தாயோ, அதுதான் (இந்நிலை எனக் கூறப்படும்) அல்குர்ஆன் 50:19

நபி(ஸல்) அவர்கள் தனது மரணத்தருவாயில் அனுபவித்த செய்தியை அப்போது அவருடனிருந்த துணைவியார் அன்னை ஆயிஷா(ரழி) கூறுகிறார்கள்.

நபி(ஸல்) அவர்கள் தம் இருகைகளையும் குவளையிலிருந்த நீரில் நுழைத்து தம் முகத்தில் தடவிக் கொண்டு

“வணக்கத்திற்குரியவன் அல்லாஹ்வைத் தவிர வேறெவருமில்லை மரணத்திற்குத் துன்பங்கள் உண்டும் எனக்கூறி பிரார்த்தித் தவர்களாக மரணித்தார்கள். ஆதாரங்கள்: புகாரி, ர.அ. : 4449, 6510

யா அல்லாஹ்! என்னை மரணவேதனையிலிருந்து காத்தருள் வாயாக! எனப் பிரார்த்தித்தார்கள். அறிவிப்பு: அன்னை ஆயிஷா(ரழி)

நூல்கள்: திர்மிதி : 900, இப்னுமாஜா : 1612., முஸ்னது அஹ்மது : 23220, 23280, 23341, 24021

ரசூல்(ஸல்) அவர்கள் நோய்வாய்ப்பட்டு இயற்கை மரணம் எய்தினார்கள். அல்லாஹு வின் அன்புக்கும், அருளுக்கும் உரிய வராக வாழ்ந்த ரசூல்(ஸல்) அவர்களே மரணவேதனையை அனுபவித்து அதிலிருந்து பாதுகாப்பு தேடியுள்ளார்கள் என்றால், மரணவேதனையின் கடுமையை, கொடுமையை நாம் உணரலாம். எனவே, இயற்கை மரணத்தை சந்திப்பவர் படவிருக்கும் மரண வேதனையைப் பற்றி திருகுர்ஆனும், நபிமொழிகளும் நமக்கு தெளிவான காட்சிகளைக் காட்)டுவதை காண்பீர்:

“மரணத்தருவாயில் ஒருவனின் (உயிர்) தொண்டைக் குழியை அடையும் போது அந்நேரம் நீங்கள் பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள் ஆயினும், நாமோ அவனுக்கு உங்களை விட மிகவும் சமீபமாக இருக்கின்றோம். அல்குர்ஆன் 56:83, 84, 85

இச்செய்தியை மேலதிகமான விளக்கத்துடனும் அல்லாஹ் விவரிக்கின்றான்:

“இடுப்பை ஒடிக்கும் ஒரு பேராபத்து தம் மீது ஏற்படப் போவதாக அவை உறுதி கொண்டிருக்கும். அவ்வாறல்ல! (மரண வேளையில் அவனுடைய உயிர்) தொண்டைக் குழியை அடைந்து விட்டால், “மந்திரிப்பவன் யார்? எனக் கேட்கப்படுகிறது. ஆனால்... அவனோ நிச்சயமாக அது தான் தன் பிரிவு (காலம்) என்பதை உறுதி கொள்கிறான். மேலும், கெண்டைக்கால் கெண்டைக்காலுடன் பின்னிக் கொள்ளும், உம் இரட்சகனிடம் அந்நாளில் தான் இழுத்துச் செல்லுதல் இருக்கிறதும். அல்குர்ஆன் 75:25, முதல் 30 வரை

“அவர்கள் பார்த்துக் கொண்டிருக்கும் போதே யாரோ அவர்களை மரணத்தின் பால் இழுத்துக் கொண்டு செல்வது போன்று உணர்கிறார்கள். அல்குர்ஆன் 8:6

“போர் புரியுமாறு கூறப்பட்டால், எவர்களது இதயங்களில் (நயவஞ்சக) நோய் உள்ளதோ, அவர்கள் மரண(பய)த்தினால் தனக்கு மயக்கம் ஏற்பட்டவன் நோக்குவது போல் உம்மை நோக்குவதை நீர் காண்பீர்! அல்குர்ஆன் 47:20

மரணபயத்தின் பார்வை எப்படியிருக்கும் என்பதையும் அல்லாஹ் விவரிக்கின்றான்:

“பயம் ஏற்படும் சமயத்தில், மரணத்தருவாயில் மயங்கிக் கிடப்பவர் போல், அவர்களது கண்கள் சுழன்று, சுழன்று, அவர்கள் உம்மைப் பார்த்துக் கொண்டிருப்பதைப் காண்பீர் அல்குர்ஆன் 33:19

இவ்விறை வசனங்கள் இயற்கையாக மரணத்தை சந்திப்பவரின் நிலைமைகளை தெள்ளத் தெளிவாக விளக்குகின்றன. அவையாவன:

1. இடுப்பு ஒடிந்த நிலையில் நிற்க முடியாமை.
2. கெண்டைக்கால்கள் ஒன்றையொன்று பின்னி நடக்க முடியாமை.
3. உயிர் தொண்டை குழியை அடைக்க பேச்சில் தடுமாற்றம் அல்லது பேச முடியாமை.
4. மயங்கிய நிலை.
5. மரணத் தருவாயில் கண்கள் நிலைகுத்தி நிற்றல்.
6. உடல் வெப்பத்தால் குளுமையை நாடுதல்

ரசூல்(ஸல்) அவர்கள் மரணித்தபோது அவரோடு தொடர்ந்து இருந்து அவர்பட்ட மரணவேதனைகளை நேரில் கண்ட நம்முடைய அன்னை ஆயிஷா(ரழி) அவர்கள் அறிவிக்கிறார்கள்:

அல்லாஹ்வின் தூதர்(ஸல்) அவர்கள் கடுமையாக நோய் வாய்ப்பட்டு, அவர்களின் வேதனை அதிகரித்தபோது, என் வீட்டில் தங்கி சிகிட்சையும், பராமரிப்பும் பெற்றிட தம் (மற்ற) மனைவி களிடம் அனுமதி கேட்டார்கள். அவர்களும் அனுமதியளித்தனர். அப்போது நபி(ஸல்) அவர்களின் கால்கள் பூமியில் இழுபட அப்பாஸ்(ரலி) அவர்களுக்கும் மற்றொரு மனிதருக்கும் (அலி(ரழி) அவர்களுக்கும்) இடையில் தொங்கியபடி என் இல்லம் வந்தார்கள்.

ஆதாரங்கள்: புகாரி : ர.அ 198, 665, 2588, 4442, முஸ்லிம்: ஆ.மொ. 833, 834, இப்னு மாஜா : 1608, அஹ்மது: 22974, 24725

நபி(ஸல்) அவர்கள் எந்த நோயில் மரணித்தார்களோ அந்நோயின் போது நபியவர்களின் தொண்டை கட்டிக் கொள்ள (கம்மிய, கரகரத்தக் குரலில்) "அல்லாஹ் அருள் புரிந்த இறைத் தூதர்கள், உண்மையாளர்கள், இறைப்பாதையில் உயிர் நீத்த தியாகிகள், நல்லடியார்களுடன் இருப்பார்கள் (அல்குர்ஆன் 4:69) என்ற இறைவசனத்தை ஓதினார்கள். அறிவிப்பு: அன்னை ஆயிஷா(ரழி)

ஆதாரங்கள்: புகாரி: ர.அ : 4435, 4586, முஸ்லிம் : ஆ.மொ. 5988,

இப்னு மாஜா: 1609, முஸ்னது அஹ்மது: 24262, 24519, 25115

நபி(ஸல்) அவர்களுக்கு மரணம் நெருங்கி விட்டபோது, அவர்கள் சிறிது நேரம் மயக்க முற்றார்கள். பிறகு அவர்களின் மயக்கம் தெளிந்தபோது, வீட்டின் கூரையை நோக்கி நபியவர்களின் பார்வை நிலைகுத்தி நின்றது. பின்னர் "இறைவா! (சுவர்க்கத்தில்) உயர்ந்த தோழர்களுடன் சேர்த்தருள்! எனப் பிரார்த்தித்தார்கள்.

அறிவிப்பு: அன்னை ஆயிஷா(ரழி)

ஆதாரங்கள்: புகாரி: ர.அ. 4437, 4463, 6358, 6509, முஸ்லிம்: ஆ.மொ. : 5988 முதல் 5990 இப்னுமாஜா : 1609, அஹ்மது : 23083

நபி(ஸல்) அவர்களின் மரணத்திற்கு முந்திய நோய் வியாழக் கிழமை அன்று மிகவும் கடுமையானது.

அறிவிப்பு: இப்னு அப்பாஸ்(ரழி)

ஆதாரங்கள்: புகாரி ர.அ. : 3053, 3168, 4431, முஸ்லிம் : ஆ.மொ. : 4014, 4015, அஹ்மது: 1834, 3165, 3089, 3090

நபி(ஸல்) அவர்கள் மரணப்படுக்கையில் விழுந்த போது, (வியாழனன்று) அங்கு வருகை தந்த நபியவர்களின் சிறிய தந்தை அப்பாஸ் பின் அப்துல் முத்தலிப்(ரழி) அவர்கள், "அப்துல் முத்தலி புடைய மக்களின் (நபியவர்கள் அவருடைய பேரர்) முகங்களைப் பார்த்து மரணக்களையை அடையாளம் கண்டு கொள்பவன் நான். அல்லாஹ்வின் மீது ஆணையாக! நீங்கள் மூன்று நாட்களுக்குப் பிறகு வேறொருவர் அதிகாரத்திற்குப் பணிந்தவராக ஆகிவிடப் போகிறீர்கள். இந்நோயில் நபியவர்கள் இறந்து விடுவார்கள் என எண்ணுகிறேன் என்று அலி(ரழி) அவர்களிடம் தெரிவித்தார்கள்.

அறிவிப்பு: இப்னு அப்பாஸ்(ரழி)

ஆதாரங்கள்: புகாரி :ர.அ. : 4447, 6266, முஸ்னது அஹ்மது: 2254, 2842

நபி(ஸல்) அவர்கள் திங்கள் கிழமை மரணமடைந்தார்கள்.

அறிவிப்பு: அன்னை ஆயிஷா(ரழி)

ஆதாரம்: முஅத்தா : 539, முஸ்னது அஹ்மது : 23056, 23724, 23856

நபி(ஸல்) அவர்கள் புதன்கிழமை நல்லடக்கம் செய்யப் பட்டார்கள். அறிவிப்பு: அன்னை ஆயிஷா(ரழி) ஆதாரம்: அஹ்மது: 23646

இந்நபிமொழிகள் மூலம் ரசூல்(ஸல்) அவர்கள் வியாழக் கிழமை நடக்க முடியாத நிலை ஏற்பட்டு மரணப் படுக்கையில் படுத்துள்ளார்கள். அவருடைய பாதங்கள் சக்தியிழந்து பூமியில் இழுபட இப்னு அப்பாஸ், அலி(ரழி அன்குமா) இருவரும் அழைத்து வந்திருக்கிறார்கள்.

இடுப்பு ஒடிந்த நிலை.

மரணத்தருவாயில் தொண்டைக் கட்டிய நிலையில் கரகரத்தக் குரலில் அல்லாஹ்விடம் பிரார்த்தித்திருக்கிறார்கள்.

சரியாக பேச முடியாத நிலை.

மயக்கமுற்று தெளிந்த போது நபியவர்களின் பார்வை வீட்டின் கூரையை நோக்கி நிலைகுத்தி நின்றுள்ளது.

இவையனைத்தும் ஏகன் அல்லாஹ் அவனுடைய இறுதி வேதத்தில் நபி(ஸல்) அவர்கள் நலமோடு இருந்தபோதே மரணத்தின் அறிகுறிகளாக, கொடிய வேதனைகளாக கூறியவை. நபியவர்களின் மரணமே இறைவாக்கின் செயல்வடிவமானது. அதிசயத்தக்க செய்தி மட்டுமல்ல. மனித இனத்தில் மரணவேதனையிலிருந்து எவரும் விதிவிலக்கைப் பெறவில்லை என்பது விளங்குகிறது.

இவ்விதமாக நபியவர்களின் மரணவேதனையை நேரில் கண்ட நம்முடைய அன்னை ஆயிஷா(ரழி) அவர்களுக்கு அப்போது 16 வயது. நபியவர்களின் மரணத்தின் வேதனைகளை, கஷ்டங்களை நேரில் கண்ட நான் அதற்குபின் எந்த வேதனையும் எனக்கு பெரி தாகப்படவில்லை என்று கூறினார்கள். அன்னையவர்கள் ஹி. 58-ல் மதீனாவில் தனது 65-வது வயதில் மரணமடைந்தார்கள்.

### உயிர் பிரியும் நொடியில்

கொடிய மரணவேதனைக்குப் பின் உயிர் பிரிகிறது. மரணம் முழுமையாக தழுவ ஓங்காரமாக, உயிரோடியிருந்த உடல் உயிரற்ற, சடலமாக, பிணமாக மாறுகிறது. உயிரோடியிருக்கையில் பெயரும், புகழுடன் பற்பல சிறப்புப்பட்டங்களை தனது பெயருடன் சேர்த்து வாழ்ந்தவன் இன்னாரின் மைந்தன், இன்னாரின் தந்தை எனப் புகழுடன் வாழ்ந்தவன், தனது சொந்தப் பெயரை இழக்கிறான். பிணம், சடலம், ஜனாஸா என அழைக்கப்படுகிறான். என்னே கொடுமை! உயிர் எப்படி பறிக்கப்படுகிறது மரணிப்பவரின் நிலை எப்படியிருக்கும் என்பதையும் அருள்மறை திருகுர்ஆனும், நபிமொழிகளும் தெள்ளத் தெளிவாக விளக்குவதைப் பாரீர்.

மரணத்திற்கான வானவர், “மலக்கல் மவ்த் என்று நாம் அறிவோகி. ஆனால், ஒரு மனிதனின் உயிரை அல்லாஹ் தனது வானவர்களின் பரிவாரங்களுடன் எடுக்கிறான். அப்பரிவாரத்தின் தலைமையாக “மலக்கல் மவ்த்ம் இருக்கிறார்கள்.

திருகுர்ஆன் கூறுகிறது:

உங்களில் ஒருவருக்கு மரணம் வந்து விடுமானால், நம் முடைய தூதர்(வானவர்)கள் அவர் ஆத்மாவைக் கைப்பற்று கிறார்கள். அவர்கள் (தம் கடமையில்) தவறு வதில்லை. அல்குர்ஆன் 6:61

உங்கள் மீது நியமிக்கப்பட்டிருக்கும் “மலக்குல் மவ்த் தான் உங்கள் உயிரைக் கைப்பற்றுவார். பின்னர், நீங்கள் உங்கள் இரட்சகனிடம் மீட்கப்படுவீர்கள். அல்குர்ஆன் 32:11

அவர்களது முகங்களிலும், முதுகுகளிலும் அடித்து (உயிர்களைக் கைப்பற்றும்) வானவர்கள் அவர்களை மரணமடையச் செய்கையில் (அவர்களது நிலை) எப்படி? அல்குர்ஆன் 47:27

அநியாயக்காரர்கள் மரணவேதனையில் இருக்கையில், நீங்கள் அவர்களைப் பார்த்தால், வானவர்கள் தம் கைகளை நீட்டி (இவர்களிடம்) "உங்களது உயிர்களை வெளி யேற்றுங்கள் இன்றைய தினம் நீங்கள் இழிவு தரும் வேதனையைக் கூலியாகக் கொடுக்கப்படுவீர்கள்.. என்று கூறப்படும். அல்குர்ஆன் 6:93

அவர்கள் தமக்குத்தாமே அநியாயம் செய்பவர்களான இருக்கும் நிலையில், வானவர்கள் அவர்களது உயிர்களைக் கைப்பற்றுவார்கள் அப்போது அவர்கள், "நாங்கள் எவ்வித தீமையும் செய்யவில்லையே என (பணிந்து வானவர் களிடம்) சமாதானம் கோருவார்கள். "அவ்வாறில்லை நிச்சயமாக அல்லாஹ் நீங்கள் செய்து கொண்டிருந்தவற்றை நன்கறிவான் (எனக் கூறப்படும்) அல்குர்ஆன் 16:28

அநியாயம் செய்தவர்கள்: "எங்கள் இரட்சகா! எங்களுக்கு சற்றே அவகாசமளிப்பாயாக! உனது அழைப்பை ஏற்கிறோம் உனது தூதர்களையும் பின்பற்றுகிறோம். என்று கூறுவார்கள். அல்குர்ஆன் 14:44

உங்களில் ஒருவருக்கு மரணம் வரும் முன்னரே, நாம் உங்களுக்கு அளித்ததிலிருந்து தான, தர்மம் செய்யுங்கள் (அவ்விதம் செய்யாது மரணிக்கும் சமயம்) 'என் இரட்சகா! என் தவணையை சிறிது பிற்படுத்தக் கூடாதா! அப்படியாயின் நானும் தான, தர்மம் செய்து நல்ல(ஸாலிஹான) வர்களில் ஒருவனாகி விடுவேனே' என்று புலம்புவான். ஆனால், அல்லாஹ், எந்த ஆத்மாவுக்கும் அதன் தவணை வந்து விட்டால் (அதனைப்) பிற்படுத்த மாட்டான். நீங்கள் செய்பவற்றை அல்லாஹ் நன்கு அறிந்தே இருக்கிறான். அல்குர்ஆன் 63:10, 11

ஒருவனுக்கு மரணம் வரும்போது, அவன் என் இரட்சகனே! நான் விட்டு வந்ததில் நற்காரியங்களைச் செய்வதற்காக என்னைத் திரும்ப (உலகிற்கு) திருப்பி அனுப்புவாயாக! என்பான். அவ்வாறில்லை! அவன் கூறுவது வெறும் வார்த்தைகளே! அவர்கள் எழுப்பப்படும் நாள்வரையில் அவர்கள் முன் ஒரு திரையிருக்கிறது. அல்குர்ஆன் 23:99, 100

இவ்விறை வசனங்களுக்கு விளக்கமாக நபி(ஸல்) அவர்கள் மரணிப்பவன் சந்திக்கும் நிகழ்ச்சிகளையும், அவனுடைய யதார்த்த மான நிலைகளையும் தெள்ளத் தெளிவாக விளக்கியுள்ளார்கள். நாம் மரணித்தவரின் உடலுக்கு துணி (கபன்) அணிவிக்கிறோம். ஆனால், அவருடைய உயிருக்கு (ரூஹு க்கு) அல்லாஹ் தனது வானவர்கள் மூலம் துணி (கபன்) அணிவித்து உயிரை எடுக்கிறான்.

ரசூல்(ஸல்) அவர்கள் தெளிவாக்கினார்கள்:

ஒரு நல்லடியாரின் உயிர் மரணத்தின் வானவரால் (மலக்குல் மவ்த்தால்) பறிக்கப்பட்டு இரு வானவர்கள் சுகந்தமான நறுமணத் துடன் வான்நோக்கி செல்வார்கள். வானிலுள்ள வானவர்கள் "பூமி யில் நல்லடியாராக வாழ்ந்தவரின் உயிர் பூமியிலிருந்து வருகிறது அதற்கு நம் நல்வாழ்த்துக்கள் எனப்போற்றிப் புகழ்ந்து இறைவனிடம் அவருக்காக பிரார்த்திப்பார்கள் ஒரு கெட்டவனின், பாவியின் உயிர் பறிக்கப்பட்டு வருகையில், கொடிய துர்நாற்ற மடிக்கும் என, நபி(ஸல்) அவர்கள் தனது கைத்துணியால் மூக்கைப் பிடித்துக் கொண்டு கூறினார்கள். அந்த உயிரை வானவர்கள் சபிப்பார்கள். அதற்குரிய இடத்திற்கு (நரகிற்கு) எடுத்துச்செல்ல ஆணையிடப்படும். அறிவிப்பவர்: அபூஹு ரைரா(ரழி)

ஆதாரங்கள்: முஸ்லிம்: ஆ. மொ. : 6867, இப்னு மாஜா : 4252, 4258,

அஹ்மது: 8414

கருணையின் வானவர்கள் (மலாயிகத்துர் ரஹ்மத்) நல்லடி யாரின் உயிரை எடுத்துச்செல்ல நறுமணம் பூசப்பட்ட வெண்ணிறப் பட்டை கபனாக எடுத்து வருவார்கள். தண்டனையின் வானவர்கள் (மலாயிகத்துல் அதாபு) பாவியின் உயிரை துர்நாற்றமடிக்கும் நெருப்பிலான கந்தல் துணியைக் கபனாக அணிவித்து எடுத்துச் செல்ல வருவார்கள் என நபி(ஸல்) கூறினார்கள்.

அறிவிப்பவர்: அபூஹு ரைரா(ரழி)

ஆதாரம்: நஸயீ: 1810, இப்னு ஹிப்பான், அஹ்மது

மலக்குல் மவ்த் 500 வானவர்கள் புடை சூழ சுவனத்திலிருந்து நறுமணம் கமழும் வெண்ணிற பட்டாலான கபன் துணியுடன் இறங்குவார்கள் என, நபி(ஸல்) அவர்கள் கூறியதாக தமீமுத்தாரி(ரழி) அவர்கள் அறிவிக்கிறார்கள்.

இச்செய்திகளனைத்தையும் ஒன்றிணைத்து மரணிப்பவன் மரணத்தருவாயில் காணும் நிகழ்ச்சிகளையும், உயிர்பறிக்கப்படும் நிலைகளையும் அல் பர்ராஉ பின் ஆஜிப்(ரழி) அவர்கள் கூறும் நபிமொழி தெள்ளத் தெளிவான காட்சியைக் காட்டுகிறது.

ஓர் ஏகத்துவ நல்லடியார் இவ்வுலக வாழ்வை முடித்து

மறுமை வாழ்வில் நுழையும் போது (மரணிக்கும் போது) வானிலிருந்து வெண்ணிறமுடைய வானவர்கள் இறங்குகிறார்கள். அவர்களுடைய முகம் சூரியனைப் போல பிரகாசமாக இருக்கும். அவர்களிடம் சுவனத்தின் கபன் துணி நறுமணங்களால் துவைக்கப் பட்டிருக்கும். மரணிப்பவரின் முன் அவருடைய கண்பார்வை எட்டு மளவு அமர்ந்திருப்பார்கள். (மரணிப்பவரின் பார்வை நிலைகுத்தி நிற்க காரணமிதுவே.)

பின், மலக்கல் மவ்த் (மரணத்தின் வானவர்) வந்து மரணிப்பவரின் தலைபக்கமாக அமர்ந்து, “ஓ நல்ல ஆத்மாவே! அல்லாஹ்வின் மன்னிப்பு திருப்தியின்பால் திரும்பிவிடு!“ எனக்கூறி உயிரைக் கைப்பற்றுவார். நல்லடியாரின் உயிர் தண்ணீர் பாத்திரத்திலிருந்து நீர் கொட்டுவது போல (எவ்வித) சிரமுமின்றி வெளியேறும்.

அந்த உயிரை சுவனத்திலிருந்து கொண்டு வந்த நறுமணமுள்ள (புனுகு வாசனை) கபன் துணியில் வைப்பார். அதன் நறுமணம் பூமியை சூழ விண்ணுலகுக்கு வானவர்கள் எடுத்துச் செல்வார்கள்.

பூமியை ஒட்டியுள்ள வானிலுள்ள காவலாளிகளான வானவர்கள், “இந்த நல்ல ஆத்மா யாருடையது? என வினவ உயிரை எடுத்துச் செல்லும் வானவர்கள் இறந்தவரின் பெயரைக் குறிப்பிட்டு “இன்னாரின் மகன் இன்னார் பூமியில் நற்பெயருடன் வாழ்ந்தார். அவருடைய இப்பூவுலக வாழ்வு (கெடு) முடிவடைய அவருடைய உயிர் எடுத்துச் செல்லப்படுகிறது என பதிலளிப்பார்கள். அவ் வானின் வாசல்கள் திறக்கப்பட அடுத்த வானம் என இதே நிலையில் ஆறு வானங்களைத் தாண்டி ஏழாவது வானை அடைவார்கள்.

“இல்லிய்யூன் என்பது என்னவென்று உமக்கு எது அறிவிக்கும்? அது செயல் எழுதப்பட்ட ஏடாகும். (அல்லாஹ் விடம்) நெருங்ம்ய(வான)வர்கள் அதைக் காண்பார்கள். அல்குர்ஆன் 83: 19-21

எனது இந்நல்லடியாரின் பெயரை உயர்வான இல்லிய்யூன் என்ற பதிவேட்டில் பதிவு செய்யுங்கள் பின் மீண்டும் பூமியிலுள்ள அவரது உடலில் சேர்த்து விடுங்கள் அவரை நான் மரிக்கச் செய்து மீண்டும் உயிர் தருகிறேன். மீண்டுமொரு முறை அவரை (மறுமை யில்) வெளிப்படுத்துவேன் என, அல்லாஹ் கூறுவான்.

மரணித்தவரை நாம் மண்ணறையில் (கப்ரில்) மூடியபின், அவருடைய உடலுக்கு உயிர் திருப்பித் தரப்படும். அப்போது இரு வானவர்கள் (முன்கர், நகீர்) அவரருகில் அமர்ந்து ‘உமது இரட்சகன் யார்?‘ என வினவ எவ்வித பதற்றமுமின்றி என் இரட்சகன் அல்லாஹ் என பதிலளிப்பார். அடுத்து. ‘உமது மார்க்கமென்ன?‘ என்று வினவ, ‘எனது மார்க்கம் இஸ்லாம்‘ என பதிலளிப்பார். ‘உமக்கு அனுப்பப்பட்ட இம்மனிதர் யார்?‘ என வினவப்பட, ‘இவர் ரசூல் (ஸல்)‘ அவர்கள் என பதிலளிப்பார். ‘அடுத்து உனது ஞானமென்ன?‘ என வினவப்பட “நான் இறைவேதத்தைப் படித்தேன் அதை முழுமையாக (ஈமான்) நம்பி (எனது வாழ்வில்) உண்மைப் படுத்தினேன்“ என பதிலளிப்பார்.

உடனே, வானிலிருந்து “எனது இந்நல்லடியான் சத்தியவான் உண்மையாளன் அவனுக்கு சுவன ஆடைகளை அணிவியுங்கள் அவனுக்குரிய சுவன வாசலைத் திறந்து விடுங்கள் அவனுடைய சுவனத்தை விசாலமாக்குங்கள் என அசரீரி கூறும்.

மீண்டும் மண்ணறையில் உயிர் பெற்ற நல்லடியாரின் பார்வை எட்டுமளவு மண்ணறை விசாலமாகும் சுவனத்தின் வாசல்கள் திறந்திருக்க நறுமணத்துடன் சுவனத்தின் அழகை ரசிப்பார். அப்போது நறுமணம் பூசிய வெண்ணிற ஆடையணிந்த ஒரு அழகிய மனிதர் வருவார். அவர் “ஓ நல்லடியாரே! உமக்கு நான் ஒரு நற்செய்தி கூறுகிறேன்! இந்நாள் உமக்கு வாக்களிக்கப்பட்ட நன்நாளாகும்! எனக் கூறுவார்.

மரணித்தவர், தங்களது திருமுகம் அழகிய நன்மாராயமாக தெரிகிறதே! தாங்கள் யார்? என வினவ, “நான் தாங்கள் பூமியில் செய்த நற்செயல்கள்ம் என விடையளிப்பார். நல்லடியார் மண்ணறையில் சுகமாக இருப்பார்.

கெட்டவன், பாவி மரணிக்கின்ற போது கண்கள் சிவந்த கருத்த முகத்துடன் கடுகடுத்த பார்வையுடன், (தண்டனையின்) வானவர்கள் நரகத்திலிருந்து துர் நாற்றமுடைய நெருப்பிலான துணி (கபன்) எடுத்து வருவார்கள். மலக்கல் மவ்த் அவனுடைய தலையரும்ல் அமர்ந்து, “ஓ கெட்ட ஆத்மாவே! அல்லாஹு வின் கோபம், அதிருப்தியின் பால் திரும்பி விடு! எனக்கூற, பாவி உயிர் விடமறுப்பான்.

அப்போது வானவர்கள் அவனுடைய முகங்களிலும், முதுகுகளிலும் ஓங்ம் அடித்தும் (அல்குர்ஆன் 47:27) அவனுடைய உயிரைப் பிடுங்குவார்கள்.

பாவியின் உயிர் கம்பளி துணியில் முள்ளை போட்டு உருவுவது போல கொடூரமாக உருவப்படும் அவனுடைய நரம்புகளும், மூட்டுகளும் தெறித்து விடுவது போன்ற கடிய துன்பம் ஏற்படும். அவ்வுயிர் துர் நாற்றமுள்ள கபனில் வைத்து, வான் நோக்கி எடுத்துச்செல்ல வானிலுள்ள காவலாளிகளான வானவர்கள் துர் நாற்றம் சகிக்காமல், “இந்த கெட்ட ஆத்மா யாருடையது? என வினவ, உயிரைப் பறித்துச் செல்லும் வானவர்கள், இறந்த பாவியின் பெயரைக் குறிப்பிட்டு, “இன்னாரின் மகன் இன்னார்ம் பூமியில் கெட்டவனாக வாழ்ந்தவன் அவனுடைய பூவுலக வாழ்வின் கெடு முடிய அவனுடைய உயிர் எடுத்துச் செல்லப்படுகிறது என, அவருக்காக பதிலளிப்பார்கள். வானின் வாசல்கள் திறக்கப்பட மாட்டாது எனக் கூறிய நபி(ஸல்) அவர்கள்,

“ஊசியின் காதில் ஒட்டகம் நுழையும் வரை இப்பாவிகள் சுவனத்தில் நுழைய மாட்டார்கள்ம் (அல்குர்ஆன் 7:40)

என்ற இறைவசனத்தை ஓதினார்கள்.

‘இந்த பாவியின் பெயரை பூமிக்கு அதல பாதாளத்திலுள்ள கைதிகள் - சிஞ்சீன் என்ற - பதிவேட்டில் பதிவு செய்து வீசி எறியுங்கள்‘ என அல்லாஹ் கூறுவான்.

“அவன் வானிலிருந்து விழுந்து பறவைகள் அவனை வாரி எடுத்துச் சென்றது போலும், அல்லது பெருங் காற்றடித்து, அவனை வெகு தொலைவிலுள்ள ஓரிடத்திற்கு அடித்துக் கொண்டு சென்றது போலும் ஆகிவிடுவான்ம் (அல்குர்ஆன் 22:31) என்ற இறைவசனத்தை நபி(ஸல்) அவர்கள் ஓதினார்கள்.

அவனை மரிக்கச் செய்து மீண்டும் உயிர்தருகிறேன். மீண்டுமொரு முறை அவனை (மறுமையில்) வெளிப்படுத்துவேன் என அல்லாஹ் கூற அவனுடைய உயிர் மண்ணறையிலுள்ள பாவியின் உடலில் சேர்க்கப்படும். அப்போது இரு வானவர்கள் (முன்கர், நகீர்) வந்து, ‘உனது இரட்சகன் யார்? உனது மார்க்கம் என்ன? உமக்கு அனுப்பப்பட்ட இம்மனிதர் யார்?’ என வரிசையாக கேள்வி கேட்க, ஒவ்வொரு கேள்விக்கும் “அய்யஹோ! அய்யஹோ! நானறியேன்!“ எனப்புலம்புவான்.

உடனே வானிலிருந்து, “இவன் பாவி பொய்யன் நரகவாதி அவனுடைய நரகத்தை விசாலமாக்கி, நரக வாசலைத் திறந்து விடுங்கள்ம் என, அசரீரி கூறும். பாவியின் மண்ணறை, நரகத்தின் கல்லறையாக மாறி நெருப்பாக கொதிக்க, அவனுடைய விலா எலும்புகள் நொறுங்க கப்ர் இறுக்க ஆரம்பிக்கும்.

அப்போது துர்நாற்றத்துடன், அவலட்சணத்துடன் ஒரு மனிதன் வந்து, “பாவியே! உமக்கு ஒரு கெட்டச் செய்தி கூறுகிறேன்! இந்நாள் (பூமியில்) உமக்கு வாக்களிக்கப்பட்ட நாளாகும் எனக் கூறுவான். மரணித்த பாவி, “நீ யார்? அவலட்சணமுள்ளவனாக, கெட்டவனாக தெரிகிறாய். யார் நீ?“ என வினவ, “நான் தான், நீ (பூமியில்) புரிந்த தீய செயல்கள்!“ என பதிலளிப்பான். பாவி என்றென்றும் நரக வேதனை அனுபவித்துக் கொண்டிருப்பான்.

இந்நீண்ட நபிமொழி முஸ்னது அஹ்தில் 17803 ஹதீஸாக இடம் பெற்றுள்ளது. இதில் நாம் முன் குறிப்பிட்ட எல்லா திருகுர்ஆன் வசனங்களுக்கும் விளக்கமிருப்பதை அறியலாம்.

இதன் மூலம் ஒருவன் மரணிக்கின்ற போதே அவன் நல்லவனா? தீயவனா? இறைடியனா? பாவியா? சுவர்க்கவாதியா? நரகவாதியா? என்பது மரணிப்பவனுக்கு உள்ளங்கை நெல்லிக் கனியாக விளங்கிவிடும் என்பது தெளிவாகிறது.

### மரணம் ஏன்?

வேத நூல் கொடுக்கப்பட்ட கிறித்துவர்கள் கூறுவது போல மரணம் பாவத்தின் சம்பளம் அல்ல. இக்கூற்று சரியெனில், இறைவனின் மேலான படைப்பான முழு மனித இனமும் மரணத்தை சந்திக்கின்றன. எனவே, முழு மனித சமுதாயமே “பாவிகள் என்ற பகுத்தறிவு ஏற்காத, ஏற்க முடியாத பொருள் வரும்.

நாத்திகர்கள் கூறுவது போல மரணம் இயற்கையானது அதில் எந்த சிறப்புமில்லையென்றால் உலகிலுள்ள ஓரின தாவரம் முதல் எல்லா படைப்பினங்களும் மரணத்தை சந்திக்கின்றன. அதற்கென நாம் பெரிதும் வருந்துவதில்லை. அவற்றின் மரணம் நம்மை வெகுவாக பாதிப்பதில்லை. ஆனால், பகுத்தறிவுள்ள மனிதன் மரணிக்கின்ற போது, நம்முடைய உள்ளம் சொல்லொனா கவலைக் கொள்கிறது. ஏன்? மரணத்தில் அர்த்தமில்லையெனில், மற்ற படைப்பினங்களுக்கும் மனித இனத்திற்கும் வேறுபாட்டில்லை என்ற பகுத்தறிவு ஏற்காத, ஏற்க முடியாத பொருள் வரும்.

மரணம் இப்பிறவியின் முடிவு: அடுத்தப் பிறவியின் ஆரம்பம் என்றால், முதல் தேர்வில் தோல்வியுற்றவன். அடுத்தத் தேர்வில் வெற்றி பெறலாம் என்ற பொழுது போக்குத்தனம் வாழ்வில் ஒழுக்கம், ஆன்மிகத்தில் பிடிப்பின்மை ஏற்படும். இதுவும் ஏற்க முடியாத வாதம்.

மரணம் குறுகியகால, நிரந்தரமற்ற இவ்வுலக வாழ்வின் முடிவு, நிரந்தரமான மறுமை வாழ்வின் ஆரம்பம். நிரந்தரமான மறுமை வாழ்வில் சுவர்க்கவாதிகளாக வாழ நற்செயல்களை இவ்வுலகில் செய்ய வேண்டும். இவ்வுலகில் நாம் செய்யும் நல்ல - தீய செயல்களே நம்முடைய நிரந்தரமான மறுமை வாழ்வை தீர்மானிக்கும். எனவே, மரணம் வரும் முன் மறுமைக்கு நம்மை தயார் செய்து கொள்ளவேண்டும். இவ்வுலக வாழ்வு ஒன்றே. அதில் நன்றே வாழ வேண்டும் என்பது இஸ்லாமிய கொள்கை திருகுர்ஆன் கூறுகிறது.

உங்களில் அழகான (நற்) செயல்கள் செய்பவர் யார்? என்பதைச் சோதிப்பதற்காக அவன் மரணத்தையும், வாழ்வையும் படைத்தான். அல்குர்ஆன் 67:2

ரசூல்(ஸல்) அவர்கள் மேலும் தெளிவுபடுத்தினார்கள்:

மரணித்தவனின் சடலத்தை மண்ணறையில் புதைக்க எடுத்துச் செல்லும்போது, அவனுடன் மூன்று விஷயங்கள் மண்ணறை (கப்ர்) வரை வருகின்றன. சடலம் புதைக்கப்பட்ட பின், இரண்டு திரும்பி விடுகின்றன. ஒன்று மட்டுமே மரணித்தவனுடன் தொடர்ந்து செல்லும். சடலத்துடன் மண்ணறை வரை செல்லும் மூன்று:

1. அவனுடைய உறவுகள்.
2. அவனுடைய பொருட் செல்வங்கள்
3. அவனுடைய செயல்கள்

சடலத்தை அடக்கியபின் அவனுடைய உறவுகளும், பொருட் செல்வங்களும் திரும்பி விடும். ஆனால், அவனுடைய நல்ல - தீய செயல்கள் அவனுடனே தொடர்ந்து இருக்கும்.

அறிவிப்பாளர்: அனஸ் பின் மாலிக்(ரழி)

ஆதாரங்கள்: புகாரி: ர.அ : 6514, முஸ்லிம்: ஆ.மொ. : 7064, நஸயீ : 1911,

திர்மிதி: 2301, அஹ்மது: 11637

மண்ணறையில் மீண்டும் அல்லாஹ்வினால் உயிர் கொடுக்கப் பட்டதும் அவனுடைய நல்ல - தீய செயல்கள் அழகானவனாகவும் அவலட்சனமுள்ளவனாகவும் வந்து நற்செய்தி கெட்ட செய்தி சொல்வதை முந்திய நபிமொழியில் நாம் கண்டோம். எனவே, இவ்வுலகில் நாம் மறுமைக்காக வாழ்ந்த வாழ்வின் முடிவைக் காணும் காட்சியே மரணம். நிரந்தரமான வாழ்வின் ஆரம்பம். எனவேதான், பெரும்பாலான முஸ்லிம்கள் வழக்கத்தில், மரணித் தவர்களை "மர்ஹூம் (மறுமையின் ருசிகாண அல்லாஹ்வினால்) ஆசிர்வதிக்கப்பட்டவர்கள் எனப் பெருமைப்படுத்தி அழைக்கின்றனர் போலும்.

## நல்ல மரணத்தின் அடையாளங்கள்

1. இஸ்லாத்தின் மூலக்கலிமா 'லாயிலாஹ இல்லல்லாஹ்' (வணக்கத்திற்குரியவன் ஏகன் அல்லாஹ்வைத் தவிர வேறு எவரு மில்லை) என்ற ஏகத்துவ வார்த்தையை எவர் மரணத்தின் போது மறக்காமல் சொல்கிறாரோ அவர் சுவனம் நுழைவார் என, நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். அறிவிப்பு: முஆத்(ரழி),நூல்: ஹாம்

ரசூல்(ஸல்) அவர்கள் மரணிக்கின்ற போது, இக்கலிமாவைக் கூறி உயிர் பிரிந்தார்கள் என்பதை முந்திய நபிமொழிகளில் காணலாம்.

2.‘ மரணத்தின் போது ஒரு நல்லடியானின் நெற்றி வியர்த் திருக்க மரணித்தால் அவர் நற்பேறு பெற்றவர்‘ என, நபி(ஸல்) அவர்கள் கூறியதாக புரைதா(ரழி) அவர்கள் அறிவிக்கிறார்கள். ஆதாரம்: நஸயீ, திர்மிதி, ஹாம்

3. ஜு ம்ஆ தினத்தின் இரவிலோ, பகலிலோ ஒரு இறையடியார் மரணித்தால், மண்ணறையின் வேதனையை அல்லாஹ் நீக்கி விடுவான் என்பதும் நபிமொழி. ஆதாரம்: திர்மிதி, அஹ்மது

4. போர்க்களத்தில் உயிர் தியாகம் செய்த உத்தமர்கள். ஆதாரம்: திர்மிதி, இப்னுமாஜா, அஹ்மது

5. ‘போருக்குச் செல்ல, நோயினால் பாதிக்கப்பட்டு, போரில் கொல்லப்படாமல் அந்நோயினால் மரணமடைந்தாலும் நற்பேறு பெற்றவரே!‘ என, நபி(ஸல்) அவர்கள் தெளிவாக்கினார்கள். ஆதாரம்: முஸ்லிம், அஹ்மது

6. பிளேக் போன்ற கொள்ளை நோயினால் மரணித்த ஏகத்துவ வாதி தியாகியாவார் என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். ஆதாரம்: புகாரி, அஹ்மது, தயாலிஸி

7. ‘எவர் வயிற்றோட்ட (வாந்தி, பேதி) நோயினால் மரணிக்கிறாரோ, அவர் தியாகியவார்‘ என, ரசூல்(ஸல்) அவர்கள் கூறினார்கள். ஆதாரம்: முஸ்லிம்

8. நீரில் மூழ்கி இறப்பவர்.

9. வீடு இடிந்து விழுந்து இடிபாடுகளில் இறப்பவர்.

10. பெண்கள் பிரசவத் தீட்டு கழியு முன் இறப்பவர்.

11. தீயினால் மரணமடைபவர்

12. பாசிசவாத நோயினால் இறப்பவர்.

13. காச நோயினால் இறப்பவர்.

14. தனது பொருளை, உரிமையைப் பாதுகாக்க திருடனுடன் தீயவனுடன் போராடி இறப்பவர்.

15. தனது குடும்பத்தாரின் மானம் காக்க போரிட்டு, போராடி மரணிப்பவர்.

16. நல்லொழுக்க, நற்செயலை செயல்படுத்துவதில், விரோதிகளால் கொல்லப்படுபவர்.

17. தன்னுயிரை, மானத்தைக் காக்க போராடி, போரிட்டு அதில் மரணிப்பவர்.

18. உள்ளச்சத்துடன் (இஸ்லாஸு டன்) இறைவழிபாட்டிலிருக்கையில் மரணமடைந்தவர்.

19. கொடுங்கோலனுக்கு நல்லுரைக் கூறிய காரணத்தால் கொல்லப்பட்டவர்.

## மரணித்தவரின் சுற்றத்தாருக்கு ஆறுதல் கூறல்

மரணம் சம்பவித்த குடும்பத்தினர், உற்றார், உறவினர்கள், தோழர்கள், நண்பர்கள் மிகவும் கவலையுடனிருப்பார்கள். அவர்கள் எந்த மதத்தை, சமயத்தை, கொள்கை கோட்பாட்டைக் கொண்டவர்களாக இருப்பினும், அவர்களது மனம் திருப்தியுடன் ஆறுதல் அடைய கவலை, துக்கம் குறையும் விதத்தில் நாம் ஆறுதல் சொல்லவேண்டும். அவர்களுக்கு எதையும் தாங்கும் இதயத்தையும், பொறுமையும் கிடைக்க அல்லாஹ்விடம் பிரார்த்திக்க வேண்டும்.

துன்பத்தால் பீடிக்கப்பட்ட தனது சகதோழர்களுக்கு அனுதாபம் தெரிவித்து ஆறுதல் கூறினால், மறுமையில் பிறர் பார்த்து பொறாமைப்படும்படியான அழகிய ஆடைகளை அல்லாஹ் அவனுக்கு அணிவிப்பான் என, ரசூல்(ஸல்) அவர்கள் அறிவுறுத்தினார்கள். அறிவிப்பு: அனஸ் பின் மாலிக்(ரழி)

ஆதாரங்கள்: இப்னு அஸாகீர், இப்னு அபீஷைபா

நபி(ஸல்) அவர்கள் தனது மகள் ஜைனப்(ரழி) அவர்களுக்கு, அவருடைய மகன் மரிக்கின்ற போது கூறிய ஆறுதல் மொழி: எடுப்பதும், கொடுப்பதும் ஏகனின் ஏகாதிபத்ய உரிமை. ஒவ்வொன்றுக்கும் ஒரு எல்லையை அல்லாஹ் வகுத்துள்ளான். அவன் தரும் சோதனைகளை ஏற்று பொறுமையுடனிருப்பது தான் நல்லது. அறிவிப்பு: உஸாமா பின் ஜைது(ரழி)

ஆதாரங்கள்: புகாரி, ர.அ. : 1284, 5665, 6602, 6655, 7377, 7448, முஸ்லிம்: ஆ.மொ. : 2008, அபூதாவூத்: ஆ.மொ. : 3119, நஸயீ: 1845, இப்னு மாஜா : 1577, அஹ்மது: 20777, 20790, 20800

நபியவர்களின் அன்புத்தோழர் ஒருவர் தனது கண்மணியான குழந்தை இறந்ததால், கடும் துக்கத்திலிருந்த போது நபி(ஸல்) அவர்கள் கூறிய ஆறுதல் மொழிகள்:

“தோழரே! உங்கள் குழந்தையினால் நீர் வாழ்நாள் முழுதும் மகிழ்ச்சி அடைவதை விரும்புகிறீரா? அல்லது அக்குழந்தை மறுமையில் சுவர்க்கத்தின் வாசலை உமக்காக திறந்து விடுவதை விரும்புகிறிரா?“ என, நபி(ஸல்) அவர்கள் வினவினார்கள். “அல் லாஹ்வின் தூதரே! அக்குழந்தை எனக்கு முன் சென்று எனக்காக சுவர்க்க வாசலைத் திறந்து விடுவதைத்தான் விரும்புகிறேன்“ என பதிலளித்தார் “அவ்விதமே நிகழும்! கவலைப்படாதீர்!“ என நபி (ஸல்) அவர்கள் ஆறுதளித்தார்கள். அறிவிப்பு: குர்ரத்துல் முஜ்னீ(ரழி) ஆதாரம்: நஸயீ: 1847, 2061 இப்னு ஹிப்பான் ஹாம், அஹ்மது: 1டூ டூ384

தந்தையின் மறைவிற்கு மகனுக்கு நபி(ஸல்) அவர்கள் கூறிய ஆறுதல்: ஜா∴பர் பின் அபீதாலிப் அவர்கள் போரில் உயிர் நீத்ததும், அவருடைய குடும்பத்தினருக்காக, “யா அல்லாஹ்! ஜா∴பரது குடும்பத்திற்கு நீ பிரதிநிதியாக இருப்பாயாக! (அவருடைய மகன்) அப்துல்லாஹ்வுடைய வியாபாரத்தில் அபிவிருத்தியளிப்பாயாக! எனப் பிரார்த்தித்தார்கள். அறிவிப்பு: அப்துல்லாஹ்பின் ஜா∴பர்(ரழி) ஆதாரம்: அஹமது 1659, ஹாம்

## குழந்தையை இழந்த தாய்க்கு நபி(ஸல்) அவர்கள் கூறிய ஆறுதல்:

மூன்று குழந்தைகளை (மரணத்தில்) இழந்த பெற்றோர் பாக்கியசாலிகள் மறுமையில் அக்குழந்தைகள் பெற்றோரை சுவர்க்கத்திற்கு அழைத்துச் செல்லும், மற்றொரு தோழருக்கு இரண்டு குழந்தைளை இழந்தவர்களும் அவ்விதமே! எனக் கூறினார்கள். அறிவிப்பு: புரைதா(ரழி), ஆதாரம்: ஹாம், ஹைதமீ

மரணித்தவருக்கு நாம் சேர்ப்பிக்கும் நன்மைகள்

1. மரணித்தவர் தனது மரணத்திற்கு முன் ஏதாவது மரண சாசனம் (திருகுர்ஆன் 2:180, 181, 182, 5:106 வாக்குபடி) செய்து வைத்திருந்தால், அது மார்க்க அடிப்படையில் அங்கீகரிக்கப் பட்டதாக இருந்தால், நீதமுடன் அவருடைய வாரிசுதாரர்கள், பொறுப்பாளர்கள் அதனை நிறைவேற்ற வேண்டும். அதன் நன்மைகள் மரணித்த வருக்கும், நிறைவேற்றியவருக்கும் நிறைவாக கிடைக்கும்.

2. மரணித்தவர் நோன்பு வைப்பதாக நேர்ச்சை செய்திருந்தால் அவருடைய பொறுப்பாளி, வாரிசுதாரர் அந்நேர்ச்சையைப் பூர்த்தி செய்யவேண்டும்.

யாராவது நோன்பு நேர்ச்சை செய்து மரணித்தால், அவரு டைய வாரிசுதாரர் அதனை நிறைவேற்றட்டும். அறிவிப்பு: அன்னை ஆயிஷா(ரழி) ஆதாரங்கள்: புகாரி: ர.அ. : 1952, முஸ்லிம் : ஆ.மொ. : 2553, அபூதாவூத், ஆ.மொ. : 2394, 3305, அஹ்மது : 23265 பைஹகீ: 6-279

3. மரணித்தவர் யாரிடமாவது கடன்பட்டிருந்தால், வாரிசு தாரர் அவருடைய கடனை அடைத்தபின்னே தங்களுக் கிடையில் பாகப்பிரிவினை செய்ய வேண்டும். பார்க்க: அல்குர்ஆன் 4:10, 11

4. நற்செயல்கள் புரியும் நல்லொழுக்க மக்களின் செயல்களும் இறந்த பெற்றோருக்கு பயனமளிக்கும்.

நபி(ஸல்) கூறினார்கள்:

தன் உழைப்பால் உண்பதே மனிதனுக்கு மிக நல்லது. அவனுடைய மகனும் அவன் உழைப்பே. அறிவிப்பு: அன்னை ஆயிஷா(ரழி)

ஆதாரங்கள்: அபூதாவூத், ஆ.மொ. : 3521, 3522, நஸயீ: 4373,முதல் 4376,

தாரமி : 2425, திர்மிதி: 1278, இப்னுமாஜா : 2128, 2281, தயாலிஸி : 1580,

ஹாம் 2-46, அஹ்மது, 22904, 23005, 23803, 23809, 24133, 24231,

24433, 24474, 24488, 24662

5. நல்ல அடையாளங்கள், நிலையான தர்மங்கள் மரணித்த பின்பும் நன்மையளிக்கும்.

நிச்சயமாக நாமே மரித்தவர்களை உயிர்ப்பிக்கிறோம் (நன்மை, தீமைகளில்) அவர்கள் முற்படுத்தியதையும், அவர்கள் விட்டுச் சென்றதையும் நாமே எழுதுகிறோம். அனைத்தையும் ஓர் தெளிவான பதிவேட்டில் பதிந்துள்ளோம். அல்குர்ஆன் 36:12

நபி(ஸல்) அவர்கள் தெளிவாக்குகின்றனர்:

ஒருவர் இறந்தால் அவருடைய எல்லா நற்செயல்களும் முடிந்து விடுகின்றன. மூன்றே மூன்று நற்செயல்கள் அவர் இறந்த பின்னும் தொடர்ந்து நன்மைகளைப் பெற்று தரும், அவையாவன:

1. நிலையாக நடைபெறும் தர்ம செயல்கள்

2. பயனுள்ள கல்வி

3. பிரார்த்திக்கும் நன் மக்கள் அறிவிப்பு : அபூஹுரைரா(ரழி) ஆதாரங்கள்: அதுபுல் முஃப்ரத் புகாரி: 38, முஸ்லிம்: ஆ.மொ.:4005, அபூதாவூத்: ஆ.மொ. 2874, தாரமி: 558, நஸயீ: 3591, திர்மிதி: 1297, இப்னுமாஜா: 228, அஹ்மது: 8489

எச்சரிக்கை: புதினங்கள் வழிகேடுகளாகும்.

1. நாம் மேலே குறிப்பிட்டுள்ளவைகள் தவிர, வேறு எந்த செயல்களுக்கும் இஸ்லாத்தில் இடமில்லை. இன்று மக்களிடையே பிரபல்யமாகவுள்ள 7ம் பாத்திஹா, 16-ம் பாத்திஹா, 40ம் பாத்திஹா, வருட பாத்திஹா, குர்ஆன் ஓதி கத்தம் பாத்திஹா, யாஸீன், குர்ஆன் ஓதி ஹதியா செய்தல் போன்றவை மார்க்கத்தில் புதிதாக இணைக்கப்பட்டவை.

2. மரணித்தவருக்கு அனுதாப கூட்டங்கள் போடுவதோ, இரங்கல் தீர்மானங்கள் எடுப்பதோ, அறிக்கைகள் வெளியிட்டு அனுதாபத்தை தேடுவதோ இஸ்லாமிய நெறியில் உள்ள வழிமுறை களல்ல.

3. ஆறுதல் கூறுபவர்களுக்கு உணவு, சிற்றுண்டி தயாரித்து மரணித்தவர் வீட்டில் விருந்து கொடுப்பது மரணித்தவரின் ஜனாஸா(மண்ணறை பயணம்)விற்கு வந்தவர்களுக்கு உணவு, விருந்து அளிப்பது கட்டாயம் தவிர்க்கப்பட வேண்டிய செயல்கள். ஜரீர் இப்னு அப்துல்லாஹ் பஜ்லி(ரழி) அவர்கள்:

மரணித்தவர் வீட்டில் கூடியிருந்து உணவு உண்பதை நாங்கள் (இஸ்லாம் வெறுக்கும்) ஒப்பாரி வைத்து அழுவது போன்ற பாவமாக கருதினோம். என்றார்கள். ஆதாரம்: இப்னு மாஜா, அஹ்மது

வந்தவர்களுக்கு உணவளிப்பதில் இப்பாவமான செயலை விட்டு நபிவழியில் செயல்படுத்த வழியுண்டு. அது என்ன?

மரணித்தவரின் வீட்டாருக்கு உறவினர்கள், நண்பர்கள், தோழர்கள், பக்கத்து வீட்டினர் ஆகியோர் உணவு தயாரித்துக் கொடுக்கலாம்.

ஜாஃபர்(ரலி) அவர்கள் போரில் உயிர் நீத்த செய்தி கிடைத்ததும் ஜாஃபரின் வீட்டாருக்கு உணவு தயாரித்துக் கொடுங்கள். ஏனெனில், அவர்களை வேதனைக்குள்ளாக்கும் செய்தி வந்துள்ளது என, நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். அறிவிப்பு: அப்துல்லாஹ் பின் ஜாஃபர்(ரழி) ஆதாரங்கள்: அபூதாவூத்: ஆ.மொ. 3126, ஹாம், திர்மிதி: 919, இப்னுமாஜா, 1599, பைஹகீ, தாராகுத்னீ, அஹ்மது: 1660

மற்றவையனைத்தும் மாற்று மதத்தினரின் சகவாச தோஷத்தால் நம்மிடையே உருவான புதினங்கள் (பித்அத்துக்கள்) ஆகும்.

புதினங்கள் அனைத்தும் பித்அத்துகள், பித்அத்துகள் அனைத்தும் வழிகேடு அனைத்து வழிகேடுகளும் நரகிற்கு இட்டுச் செல்லும் என்பது நபி(ஸல்) அவர்களின் எச்சரிக்கை.

அறிவிப்பு: ஜாபிர் பின் அப்தில்லாஹ்(ரழி)

ஆதாரம்: நஸயீ: 1560, முஸ்லிம்: 1435, அபூதாவூத்: 3991, தாரமி: 208, திர்மிதி: 2601, இப்னுமாஜா: 42, 44, 45, 48 அஹ்மது : 13815, 14455, 16521, 16522.

பிரார்த்தனை(துஆக்)கள்:

மறைந்துள்ள தன் முஸ்லிம் சகோதரனுக்கு ஒரு முஸ்லிம் கேட்கும் பிராத்தனை அல்லாஹ்வினால் ஏற்றுக் கொள்ளப்படும். பிரார்த்திப்பவரின் தலையருகில் ஒரு வானவர் இருந்து அவருடைய பிரார்த்தனைக்கு ஆமீன் (ஏற்பாயாக!) கூறுவதுடன் உனக்கும், அவை கிடைப்பதாக! எனக் கூறுவார் என்று, நபி(ஸல்) அவர்கள் தெரிவித்தார்கள். அறிவிப்பு: அபூதர்தா(ரழி) ஆதாரங்கள்: முஸ்லிம்: ஆ.மொ: 6588 முதல் 6590 அபூதாவூத், ஆ.மொ. : 1529 இப்னுமாஜா: 2886, அஹமத்: 20717, 26278, 26279

எனவே, நாம் மரணித்தவருக்காகவும், அவர் சென்று அடங்கவுள்ள மண்ணறை வளாகத்தில் (கபரஸ்தானில்) அடங்கியிருப்பவருக்காகவும் பிரார்த்திக்கவேண்டும்.

1. ரப்பனா! ஃக்ஃபிர்லனா வலி இக்வானினல் லதீன ஸபஃகூனா பில்ஈமானி வலா தஜ்ஃஅல் ஃபீ ஃகுலூபினா ஃம்ல்லன் லில்லதீன ஆமனா ரப்பனா! இன்னக ரஃஉஃபுர் ரஹீம்

பொருள்: எங்கள் இரட்சகா! எங்களுக்கும், இறை நம்பிக்கை (ஈமான்) கொள்வதில் எங்களுக்கு முந்தியவர்களான எங்கள் சகோதரர்களுக்கும் பாவமன்னிப்பு அருள்வாயாக! அன்றியும், ஈமான் கொண்டவர்களைப் பற்றி எங்களுடைய இதயங்களில் பகைமையை உருவாக்காதிருப்பாயாக! எங்கள் இரட்சகா! நிச்சயமாக நீயே மிக்க இரக்கமுள்ளவன் கிருபைமிக்கவன். அல்குர்ஆன் 59:10

“அஸ்ஸலாமு அலைக்கும்! தார கைமி முஃமினீன வ இன்னா இன்ஷா அல்லாஹ் பிக்கும் லாஹிகூன்

பொருள்: இறை நம்பிக்கையாளர்களின் (மண்ணறை) குடித்தனக்காரர்களே! உங்கள் மீது சாந்தியும், சமாதானமும் நிலவுவதாக! நிச்சயமாக, அல்லாஹ் நாடினால், நாங்களும் உங்களை (வெகு விரைவில்) வந்தடைந்தோம். அறிவிப்பு: அபூஹு ரைரா(ரழி) ஆதாரங்கள்: முஸ்லிம்: ஆ.மொ.: 483, அபூதாவூத் : ஆ.மொ.: 3231, முஅத்தா : ஆ.மொ: 56, நஸயீ 150, இப்னுமாஜா : 4296, அஹ்மது: 7652, 8523, 8924

அஸ்ஸலாமு அலா அஹ்லித்தாரி மினல் மு∴மினீன வல் முஸ்லிமீன, யர்ஹமஹு ல்லாஹு ல் முஸ்த∴க்தமீன மின்னா வல் முஸ்தக்கீரின வ இன்ன இன்ஷா அல்லாஹு பிகும் லாஹிகூன்.

பொருள்: இறைநம்பிக்கையாளர்(மு∴மின்)களாகிய, முஸ்லிம்களாகிய மண்ணறைவாசிகளுக்கு சாந்தி நிலவுவதாக! எங்களுக்கு முன் சென்றவர்களுக்கும், பின் செல்லவிருப்பவர் களுக்கும் (நமக்கும்) அல்லாஹ் நற்கிருபை நல்குவானாக! அல்லாஹ் நாடினால் நாங்களும் உங்களை வந்தடைந்தோம். அறிவிப்பு: அன்னை ஆயிஷா(ரழி) ஆதாரங்கள்: முஸ்லிம்: ஆ.மொ. 2126, நஸயீ: 2080, அஹ்மது: 24297

மரணித்தவரின் குடும்பத்தினர், பெற்றோர், உற்றார், உறவினர்கள், நண்பர்கள், தோழர்கள், உடன் பிறப்புக்கள் மிகவும் துக்கத்திலிருப்பவர்கள். திடீர் இழப்பு, சோதனை, கவலையால் பொறுமையிழந்து பரிதவிப்பார்கள். மனசஞ்சலத்தில் நம்முடைய பகிரங்க விரோதி ஷைத்தான் அவர்களை அவர்களறியாவிதத்தில் அவர்களது இறைநம்பிக்கை (ஈமான்) பறிபோகும் எண்ணங்களில், சொற்களில், செயல்களில் ஈடுபடுத்த முயற்சிப்பான்.

இந்நிலையில் அவர்களுக்கு சகிப்புத்தன்மையும், அளவிலா பொறுமையும், எதையும் தாங்கும் இதயமும் தேவை. இவற்றினை எல்லாம் வல்ல அல்லாஹு வைத் தவிர வேறெவராலும் அருள முடியாது. எனவே, அவர்களுக்கு அளவிலா பொறுமை, சகிப்புத் தன்மை, இறைநம்பிக்கை (ஈமானி)யிலிருந்து இம்மியும் பிறழாத உறுதி, ஸ்திரத்தன்மை, எண்ணம், சொல், செயல்களில் வரம்பு மீறாமை போன்ற பண்புகளை, குணநலன்களை ஏகன் அல்லாஹ் அருள்பாலிக்க, அல்லாஹ் நமக்கு அவனுடைய அருள்மறைக் குர்ஆனில் கற்றுத் தந்துள்ள பிரார்த்தனைகளை நாமும் பிரார்த்திக்க வேண்டும். அவர்களையும் உள்ளச்சத்துடன் (இக்லாஸு டன்) பிரார்த்திக்க அறிவுறுத்தவேண்டும். ஏனெனில், இக்குணங்களை ஏகன் அல்லாஹ்வைத் தவிர வேறெவராலும் அருள முடியாது. அவற்றில் ஒரு சில:

2. இன் ஹிய இல்லா ∴பித்னதுக் துழில்லு பிஹா மன் தஷாஉ வ தஹ்தீ மன் தஷாஉ அன்த வலிய்யுனா ∴ப∴க்பிர்லனா, வர்ஹம்னா வ அன்த கைருள் ∴க∴பிரீன்.

பொருள்: இது உனது சோதனையேயின்றி வேறில்லை இதன் மூலம் நீ நாடியோரை வழி தவறச் செய்கிறாய் மேலும், நீ நாடியோரை நேர்வழியில் நடத்துகிறாய் நீ தான் எங்களுடைய பாதுகாவலான் ஆகவே, எங்களுடைய பாவங்களை மன்னித் தருள்வாயாக! எங்களுக்கு நற்கிருபை செய்வாயாக! மன்னிப்பவர்களிலெல்லாம் நீயே மேலானவன். அல்குர்ஆன் 7:155

3. ரப்பனா! இக்ஷி∴ப் ∴அன்னல் அதாப இன்னா மு∴மினான்

பொருள்: எங்கள் இரட்சகா! நீ எங்களை விட்டும் இந்த வேதனையை நீக்குவாயாக! நிச்சயமாக நாங்கள் இறை நம்பிக்கையாளர்(மு∴மின்)களாக இருக்கிறோம். அல்குர்ஆன் 44:12

4. அல்ஹம்துலில்லாஹில்லதீ அத்ஹப ∴அன்னல் ஹஜன இன்ன ரப்பனா ல ∴க∴பூருன் ஷகூர்.

பொருள்: எங்களுடைய கவலைகளை போக்கிய அல்லாஹு விற்கே எல்லாப் புகழும், நிச்சயமாக எங்களுடைய இரட்சகன் மிக்க மன்னிப்பவன் நன்றியை ஏற்பவன். அல்குர்ஆன் 35:34

5. ரப்பன ∴ப்ரி∴உ அலைனா ஸப்ரன் வதப்பித் அ∴க்தாமனா வன்ஸு ர்னா அலல் கௌமில் கா∴பிரீன்.

பொருள்: எங்களுடைய இரட்சகனே! எங்களுக்கு அளப்பரிய பொறுமையை அள்ளித்தருவாயாக! எங்கள் பாதங்களை (ஈமானில்) உறுதிபடுத்துவாயாக! இறைமறுப்பாளர் (கா∴பிர்) களின் கூட்டத்தாரின் மீது (நாங்கள் வெற்றி பெற) உதவி செய்வாயாக! அல்குர்ஆன் 2:250

6. ரப்பன ∴பரி∴க் அலைனா ஸப்ரன் வதவ∴ப்பனா முஸ்லிமீன்.

பொருள்: எங்கள் இரட்சகனே! எங்களுக்கு அளப்பரிய பொறுமையை அள்ளி அருள்வாயாக! எங்களை (உனக்கு முற்றிலும் வழிப்பட்ட) முஸ்லிம்களாக எங்கள் (உயிரை) கைப்பற்றுவாயாக! அல்குர்ஆன் 07:126

7. ரப்பனா! ∴க்∴பிர்லீ வலிவாலிதய்ய வலில் மு∴மினீன யவ்ம ய∴கூமுல் ஹிஸாப்.

பொருள்: எங்கள் இரட்சகனே! என்னையும், எனது பெற்றோர்களையும், இறைநம்பிக்கையாளர் (மு∴மின்) களையும், கேள்வி கணக்கு (கேட்கப்படும் மறுமை) நாளில் (அனைவரது பாவங்களை) மன்னித்தருள்வாயாக! அல்குர்ஆன் 14:41

8. ரப்பான இன்னனா ஆமன்னா ∴ப∴க்பிர்லனா ∴துனபனா வ∴ம்னா அதாபந் நார்.

பொருள்: எங்கள் இரட்சகனே! நிச்சயமாக நாங்கள் உன் மீது நம்பிக்கை கொண்டோம் எங்களுக்கு எங்களின் பாவங்களை மன்னித்தருள்வாயாக! (நரக) நெருப்பின் வேதனை யிலிருந்து காத்தருள்வாயாக! அல்குர்ஆன் 3:16

9. லயின் லம்யர்ஹம்னா வய∴க்∴பிர்லனா லந கூனன்ன மினல் காஸிரீன்.

பொருள்: எங்கள் இரட்சகன் எங்களுக்குக் கிருபை செய்து எங்களை மன்னிக்காவிட்டால், நிச்சயமாக நாங்கள் நஷ்டமடைந்தவர்களாம் விடுவோம். அல்குர்ஆன் 7: 149

10. ரப்பனா! லா துஆம்த்னா இன்நஸீனா அவ் அக்த∴னா, ரப்பனா! வலா தஹ்மில் அலைனா இஸ்ரன் கமா ஹமல்தஹு அலல்லதீன மின் ∴கப்லினா, ரப்பனா! வலா துஹம்மில்நா மா லா தா∴கத்தலானா பிஹி, வ∴க்∴பு அன்னா, வ∴க்∴பிர்லனா, வர்ஹம்னா அந்த மௌலானா ∴பன்ஸு ர்னா அலல் கௌமில் கா∴பிரீன்.

பொருள்: எங்கள் இரட்சகா! நாங்கள் மறந்து போயிருப் பினும், அல்லது நாங்கள் தவறிழைத்திருப்பினும் எங்களைக் குற்றம் பிடிக்காதிருப்பாயாக! எங்கள் இரட்சகா! எங்களு டைய முன்னோரின் மீது சுமத்திய சுமையைப் போன்று எங்கள் மீது சுமத்தாதிருப்பாயாக! எங்கள் இரட்சகா! எங்கள் சக்திக்கப்பாற்பட்ட (சுமக்க முடியா) சுமையை எங்கள் மீது சுமத்தாதிருப்பாயாக! எங்களுடைய பாவங்களை பொறுத் தருள்வாயாக! எங்களை மன்னித்தருள் வாயாக! எங்கள் மீது கருணைப் புரிவாயாக! நீயே எங்களுடைய பாதுகாவலன்! இறை மறுப்பாளர் (கா∴பிர்) களின் கூட்டத்தாரின் மீது (நாங்கள் வெற்றிப் பெற) உதவி செய்வாயாக! அல்குர்ஆன் 2:286

11. ரப்பனா! ஆமன்னா ∴ப∴க்∴பிர்லானா வர்ஹம்னா வஅந்த கைருர் ராஹிமீன்.

பொருள்: எங்கள் இரட்சகா! நாங்கள் உன் மீது நம்பிக்கை (ஈமான்) கொண்டோம் நீ எங்களுடைய குற்றங்களை மன்னித்தருளி, எங்கள் மீது கிருபை செய்வாயாக! கிருபை யாளர்களிலெல்லாம் நீயே மேலானவன். அல்குர்ஆன் 23:109

12. ரப்பனா! லா தஜ்∴அல்னா ∴பித்னதன் லில்லதீன க∴பரூ வ∴க்∴பிர்லனா ரப்பனா இன்னக்க அன்தல் அஜீஜு ல் ஹகீம்.

பொருள்: எங்கள் இரட்சகனே! இறை மறுப்பாளர் (கா∴பிர்)களுக்கு எங்களைச் சோதனை(ப் பொருள்) ஆக ஆக்கிவிடாதே! எங்கள் இரட்சகனே! எங்களுக்கு (பாவ) மன்னிப்பு அருள்வாயாக! நிச்சயமாக நீயே (யாவற்றையும்) மிகைத்தவன் ஞானம் மிக்கவன். அல்குர்ஆன் 60:5

13. ரப்பி∴க்∴பிர்லீ வலிஅகீ வஅத்ம்ல்னா ∴பீ ரஹ்மத்திக்க, வஅந்த அர்ஹமுர் ராஹிமீன்.

பொருள்: என் இரட்சகனே! என்னையும், என் சகோத ரனையும் மன்னித்தருள்வாயாக! உன் நற்கிருபையில் (ரஹ் மத்தில்) பிரவேசிக்கச் செய்வாயாக! நீயே கிருபையாளர் களிலெல்லாம் மேலான கிருபையாளன். அல்குர்ஆன் 7:151

14. ஸமி∴உனா, வஅத∴னா, ∴குப்ரானக்க ரப்பனா வ இலைக்கல் மஸீர்.

பொருள்: நாங்கள் (உன் ஆணைகளை) செவிமடுத்தோம் நாங்கள் (அதன்படி இம்மியும் பிசகாமல்) வழிப்பட்டோம் எங்கள் இரட்சகனே! உன்னிடமே மன்னிப்புக் கோருகிறோம் எங்களின் (கடைசி) மீட்சியும் உன்னிடமே! அல்குர்ஆன் 2:285

15. இன்னாலில்லாஹி வ இன்னா இலைஹி ராஜிஊன்

பொருள்: நிச்சயமாக நாம் (ஏகன்) அல்லாஹு வுக்கே உரியவர்கள் நிச்சயமாக நாம் அவனிடமே திரும்பிச் செல்வோகி. அல்குர்ஆன் 2:156

இறையாணைப்படி அனைவருக்கும் வேண்டுதல்...

இதுவரை நாம் மரணத்தைப் பற்றிய இஸ்லாமிய கண்ணோட்டம் என்னவென்பதை அறிந்தோம். இக்கண்ணோட்டம் நமது நபி (ஸல்) அவர்களுக்கு மட்டும் ஏகன் அல்லாஹு வால் அருளப்பட்ட செய்திகளல்ல. வாழையடி வாழையாக இறைத்தூதர்கள் அனைவருக்கும் அறிவிக்கப்பட்ட அருள்மொழிகளாகும். இதற்கான ஆதாரங்களை திருக்குர்ஆனில் பரந்து, விரிந்து காணலாம்.

ஏகத்துவக் கொள்கைப்படி ஏகன் அல்லாஹு வை மட்டும் தனது ஒரே இரட்சகனாக, இறைவனான, கடவுளாக ஏற்று, அவனது ஆணைகளை, கட்டளைகளை அவனால் அனுப்பப்பட்ட இறைத் தூதர்கள் வாழ்ந்து காட்டிய நெறியில் இம்மியும் பிசகாமல் “செவி மடுத்தோம், கட்டுப்பட்டோம், வழிப்பட்டோம்“ என வாழும் ஒவ்வொரு முஸ்லிமும் வாழ்வின் ஒவ்வொரு நொடியும் மரண சிந்தனையுடன் நிரந்தரமான, நித்திய மறுமை வாழ்வை நோக்கமாக கொண்டு அவ்வாழ்வு சிறப்பாக அமைவதற்கான சீரிய செயல்களை நிரந்தர மற்ற இவ்வுலக வாழ்வில் செயல்படுத்த வேண்டும்.

எண்ணம், சொல், செயலில் ஏகத்துவ உணர்வு, மரண சிந்தனை இருக்குமேயானால் நிச்சயமாக நாம் தப்பு, தவறு, பாவம் செய்யவே மாட்டோம். முழு மனித சமுதாயத்திற்கு நல்லதொரு முன்மாதிரி யாக (உஸ்வதுன் ஹஸனாஹ் பக்கம்: 60:6) வாழமுடியுமென அல்லாஹு நமக்கு அறிவுரைப் பகர்ந்துள்ளான்.

முழு மனித இனத்தில் முதல் “முன்மாதிரி“ (உஸ்வதுன் ஹஸனாஹ் பார்க்க: 60:4) என அல்லாஹு வால் சிறப்பிக்கப்படும். இப்ராஹீம்(அலை) அவர்கள் நபி(ஸல்) அவர்களுக்கும், நமக்கும் மார்க்க தந்தையாகவும் கண்ணியப்படுத்தப்படுகிறார். அவர் தனது குழந்தைகள், வாரிசுதாரர்களுக்கு கூறிய உபதேசம் பாரீர்.

இப்ராஹீம் தம் குமாரர்களுக்கு உபதேசம் (வஸிய்யத்) செய்தார். யாக்கூபும் கூறினார்: “என் மக்களே! அல்லாஹ் உங்களுக்குச் சன்மார்க்கத்தை (இஸ்லாத்தை) தேர்ந்தெடுத்துள்ளான். நீங்கள் முஸ்லிம் (ஏகத்துவத்திற்கு முற்றிலும் வழிபட்டவர்)களாகவே யன்றி மரணிக்காதீர்கள். (அல்குர்ஆன் 2:132)

முந்திய இறைத்தூதர்களின் குமாரர்களுக்கு இருந்த இந்த உபதேசத்தை நபி(ஸல்) அவர்களின் முழு சமுதாயத்திற்கு உபதேசமாக அல்லாஹ் நமக்கு ஆணையிடுவதைப் பாரீர்.

இறைநம்பிக்கை (ஈமான்) கொண்டோரே! நீங்கள் அல்லாஹ்வை (உணர்ந்து) அஞ்ச வேண்டிய முறைப்படி அஞ்சுங்கள். மேலும், (ஏகனுக்கு முற்றிலும் வழிப்பட்ட) முஸ்லிம் களாகவேயன்றி, நீங்கள் மரணிக்காதீர்கள். அல்குர்ஆன் 3:102

இதனது பொருளறிந்து உள்ளுணர்வுடன் ஏகனிடம் இருகர மேந்தி இறைஞ்சுவோமாக! ஆமின்.

ரப்பன ஃபரிஃக் அலைனா ஸப்ரன் வதவஃப்பனா முஸ்லிமீன்.

பொருள்: எங்கள் இரட்சகனே! எங்களுக்கு அளப்பரிய பொறுமையை அள்ளி அருள்வாயாக! எங்களை (உனக்கு முற்றிலும் வழிப்பட்ட) முஸ்லிம்களாக எங்கள் (உயிரை) கைப்பற்றுவாயாக! அல்குர்ஆன் 07:126

நபி(ஸல்) அறிவித்த மரண முன் அறிவிப்புகள்:

ஏகன் அல்லாஹ்வைத் தவிர வேறு எவரும் மரண முன் அறிவிப்பு செய்ய இயலாது. ஆனால், அல்லாஹ் தன்னுடைய தூதர் (ஸல்) அவர்களின் மூலம் ஒரு சிலருக்கு மரண முன் அறிவிப்புகளை வெளிப்படுத்தினான். இஸ்லாத்தின் முதல் போர்க்களமான "பத்ரு யுத்தத்தின்போது, போருக்கு முந்திய நாள் போர் நடக்கவிருக்கும் இடங்களை பார்வையிட்ட இறைத்தூதர்(ஸல்) அவர்கள் குறிப்பிட்ட சில இடங்களை சுட்டிக்காட்டி அங்கெங்கு இஸ்லாத்தின் பரம விரோதிகளான அபூஜஹல், உத்பா, உதைபா, உமைய்யா பின் கலப் போன்றோர் வெட்டப்பட்டு மரணமெய்துவார்கள் என முன் அறிவிப்பு செய்தார்கள். அவ்விதமே மறுதினப் போரில் நிகழ்ந்தது.

அல்குர்ஆனில் 110வது அத்தியாயம் கடைசியாக இறக்கப் பட்ட போது அதன் தெளிவான பொருளறிந்த வெகு சில நபித் தோழர்கள் நபி(ஸல்) அவர்களின் நபித்துவம் முடிந்துவிட்டது எதற்காக முஹம்மது(ஸல்) அவர்களை அல்லாஹ் அனுப்பினானோ அந்த குறிக்கோள் முடிந்துவிட்டது வெகு விரைவில் நபியவர்கள் மரணிக்கப் போகிறார்கள் என்பதை விளங்கி கலக்கமுற்று, மன சஞ்சலமடைந்து வேதனையுடன் அழலானார்கள். அவர்களில் ஒரு வர் நபியவர்களின் அன்பு மகள் கண்மணி பாத்திமா(ரழி) அவர்கள். உடனே, நபியவர்கள் தம் மகளை அருகில் அழைத்து இரகசியமாக ஒரு சில வார்த்தைகளைக் கூற அதுவரை அழுத பாத்திமா (ரழி) அவர்கள் குதூகலமடைந்து சிரிக்கலானார்கள். நபியவர்கள் தம் மகளிடம் என்ன இரகசியம் கூறினார்கள்? என்பதை எவரும் அறியவில்லை. அப்போது அங்கு அன்னை ஆயிஷா(ரழி) அவர்களும் இருந்தார்கள்.

நபி(ஸல்) அவர்கள் மரணமடைந்து, நல்லடக்கம் செய்யப்பட்டு சில நாட்களுக்குப் பின்னர் அன்னை ஆயிஷா(ரழி) அவர்கள் பாத்திமா(ரழி) அவர்களிடம் தங்களிடம் கடைசி நாட்களில் நபியவர்கள் என்ன இரகசியம் கூறினார்கள் என ஆவலுடன் கேட்டார்கள். அதற்கு பாத்திமா(ரழி) அவர்கள், "நான் மரணிக்கப் போவது உண்மை அது வெகு விரைவில் நிகழும். அதற்காக கவலைப்படாதே! என்னுடைய மரணத்திற்குப் பின் என்னை முதன் முதலில் (மரணித்து) சந்திக்கப்போவது நீ தான் என எனக்கும் வெகு விரைவில் மரணம் வரப்போவதாகவும், நம்முடைய உற்றார், உறவினர்களில் நானே முதலில் மரணித்து நபி(ஸல்) அவர்களை சந்திப்பேன் எனவும் கூறியதால் மனமகிழ்ந்து சிரித்தேன் என்றார்கள். நபி(ஸல்) அவர்களின் இக்கூற்று இம்மியும் பிசகாமல் அவரின் உறவினர்களில் பாத்திமா(ரழி) அவர்களே முதன்முதலில் நபியவர்களின் மரணமானதிலிருந்து ஒரு வருடத்திற்குள் ஹி11ல் மரண மடைந்தார்கள்.

நபி(ஸல்) அவர்கள் தம்முடைய அன்புத்தோழர்கள், தோழிகள் அனைவருக்கும் ஒட்டுமொத்தமாக (தனித்தனியாக அல்ல) மரண முன் அறிவிப்பு செய்துள்ளதையும் நபிமொழி

நூல்களில் காணமுடிகிறது. நபியவர்கள் தம்முடைய முழு சமுதாயத் திற்கும் அறுபது முதல் எழுபது ஆண்டுகள் வரை வயது நிர்ணயிக்கப் பட்டதாகவும் சிலர் இதில் விதிவிலக்கு பெற லாமெனவும் கூறிச் சென்றார்கள். ஆனால் தம்முடைய தோழர், தோழிகளுக்கு ஹிஜ்ரி முதல் நூற்றாண்டு முடியும் வரை வயதை இறையாணைப்படி நிர்ணயித்திருப்பது நிதர்சனமான உண்மை யாகும்.

நபி(ஸல்) அவர்கள் தங்களின் (இவ்வுலக) வாழ்வின் கடைசிக் காலத்தில் (ஒரு நாள்) இஷாத் தொழுகை நடத்தி ஸலாம் கொடுத்ததும் எழுந்து நின்று "இன்றைய இரவை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள் இன்றிலிருந்து (சரியாக அடுத்த) ஒரு நூற்றாண்டின் ஆரம்பத்தில் இப்போது பூமியிலிருப்பவர்கள் எவரும் (உயிருடன்) எஞ்சியிருக்க மாட்டார்கள் என அறிவுறுத்தினார்கள்.
அறிவிப்பு: இப்னு உமர், அபூஹு ரைரா(ரழி - அன்குமா)

நூல்கள்: புகாரி: ர.அ. 116, 564, 601 முஸ்லிம்: ஆ.மொ: 6160 அபூதாவூத்: ஆ.மொ: 4334 திர்மிதி: 2177 அஹ்மது: 5360, 5755, 5873

நபித்தோழர்கள், தோழிகளுக்கான நபியவர்களின் இந்த மரணமுன் அறிவிப்பு இம்மியும் பிசகாமல் நடந்தேறியுள்ளது சரித்திர உண்மைகளாகும். நபி(ஸல்) அவர்களிடம் பத்து வயது சிறுவனாக மதீனாவில் ஒன்றிணைந்த அனஸ் பின் மாலிக்(ரழி) அவர்கள் நபியவர்கள் மதீனாவிலிருந்த (10 வருடங்கள்) காலமெல்லாம் அவர்களின் அன்பு சேவகராக, பணியாளாராக இருந்தார்கள். நபியவர்களின் பிரார்த்தனையை ஏற்று அல்லாஹ் அனஸ்(ரழி) அவர்களுக்கு நீண்ட நல்ல குடும்ப வாழ்வை, நிறைந்த குழந்தை செல்வங்களையும் நல்கினான். ஆனால், நபியவர்களின் மரண முன் அறிவிப்புப்படி ஹிஜ்ரி முதல் நூற்றாண்டின் முடிவில் ஹி91ல் அனஸ்(ரழி) அவர்கள் மரணமடைந்தார்கள். அப்போது அனஸ் பின் மாலிக்(ரழி) அவர்களின் வயது 101.

நபியவர்களின் காலத்தில் மிகச்சிறிய சிறுவராக இருந்த ஸாயிப் பின் யஜீது(ரழி) அவர்களும் நீண்டகாலம் வாழ்ந்து நபியவர்களின் முன் அறிவிப்புப்படி முதல் நூற்றாண்டின் முடிவில் ஹி91ல் மரண மடைந்தார்கள். நபித்தோழர்கள், தோழிகளில் எவரும் ஹி 91, 93க்கு மேல் வாழ்ந்ததாக சரித்திர ஆதாரங்களில்லை. என்னே அதிசயம்! என்னே வியப்பு! இவர் இறைத்தூதர் அன்றோ!

நபியவர்களின் மரண முன் அறிவிப்பின் அடிப்படையில் சில நபித்தோழர்கள், தோழிகள் மரணமான காலங்களைக் காண்போம். அன்றைய காலத்தில் பிறப்பு, இறப்புகளை பதிவு செய்யும் அமைப்புகளோ, முறையோ இல்லாததால் பெரும்பான்மையினரின் பிறப்பு வருடம் அறியப்படவில்லை. ஆனால், பிறந்து நல்லடியார்களாக வாழ்ந்து சென்றதால் அவர்கள் மரணித்த வருடங்கள் சரித்திர நூல்களில் பதிவு செய்யப்பட்டுள்ளன. ஓரளவு பிறப்பு வருட மறிந்தவர்களின் வயதையும் குறிப்பிடுகிறோம். பல நூறு ஸஹாபாக் களின் மரண விபரங்களையும் பார்க்க முடியவில்லை.

1. முஹம்மது(ஸல்) அவர்கள் (வயது 63) ஹி.10

2. கதீஜா(ரழி) (வயது 62) ஹிஜ்ரத்து ஒரு வருடம் முன்பு.

நபி(ஸல்) அவர்களின் குழந்தை செல்வங்கள்:

3. பாத்திமா பின்து ரசூலில்லாஹ் (ரழி) (வயது 29) ஹி 11

4. ஜைனப் பின்து ரசூலில்லாஹ்(ரழி)

5. ருகைய்யா பின்து ரசூலில்லாஹ் (ரழி) (பத்ரு போரன்று) ஹி 02

6. உம்மு குல்தும் பின்து ரசூலில்லாஹ் (ரழி)

7. காஸிம் பின் முஹம்மது (நபித்துவத்திற்கு முன்பே மரணம்)

8. தாஹிர் பின் முஹம்மது (நபித்துவத்திற்கு முன்பே மரணம்)

9. இப்ராஹீம் பின் ரசூலில்லாஹ்(ரழி) (வயது 1 1 - 2 வருடங்கள்) ஹி 09

நபி(ஸல்) அவர்களின் துணைவியர்கள்

10. ஸவ்தா பின்து ஸம்ஆ(ரழி)

11. ஆயிஷா பின்து அபூபக்கர்(ரழி) ஹி 58

12. ஹப்ஸா பின்து உமர்(ரழி) ஹி 41

13. ஜைனப் பின்து குஜைமா(ரழி) ஹி 06

14. ஜைனப் பின்து ஜஹ்ஷ்(ரழி) ஹி 20

15. உம்மு ஸலமா(ரழி) ஹி 62

16. ஜு வைரிய்யா பின்து ஹாரிஸ்(ரழி) ஹி 56

17. உம்மு ஹபீபா பின்து அபீ சுஃப்யான் (ரம்லா) (ரழி) ஹி49

18. ஸஃபிய்யா பின்து ஹு யய்(ரழி-யூதப் பெண்ணாக இருந்து இஸ்லாத்தை ஏற்றவர்) ஹி 50

19. மைமூனா பின்து ஹாரிஸ் (ரழி) ஹி 49

20. மர்யம் கிப்திய்யா(ரழி-அடிமைப்பெண்மணி)

(சுவன) நன்மாராயம் கூறப்பட்ட பத்து நபித்தோழர்கள்

21. அபூபக்கர் பின் அபீ குஹாஃபா (ரழி- முதல் கலீஃபா) வயது 63 ஹி 13

22. உமர் பின் அல்-கத்தாப் (ரழி- 2வது கலீஃபா) வயது 63 ஹி 23

23. உஸ்மான் பின் அஃப்பான் (ரழி- 3வது கலீஃபா)வயது 85 ஹி 35

24. அலி பின் அபீதாலிப் (ரழி- 4வது கலீஃபா) வயது 63 ஹி 40

25. தல்ஹா பின் உபைதுல்லாஹ் (ரழி) ஹி 36

26. அல் - ஜு பைர் பின் அல்-அவ்வாகி(ரழி) ஹி 36

27. ஸஃது பின் அபீவக்காஸ்(ரழி) ஹி 55

28. ஸயீது பின் ஜைது(ரழி) ஹி 51

29. அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப்(ரழி-பெருஞ் செல்வந்தர்) ஹி 32

30. அபூ உபைதா(ரழி) ஹி 18

மற்ற நபித்தோழர்கள், தோழியர்கள்:

31. ஹம்ஜா பின் அப்துல் முத்தலிப்(ரழி- வயது 56) (உஹது) ஹி 03

32. அப்பாஸ் பின் அப்துல் முத்தலிப்(ரழி) ஹி 32

33. ஹஸன் பின் அலி (ரழி-நபி(ஸல்) அவர்களின் பேரர்) ஹி 50

34. ஹு சைன் பின்அலி (ரழி-நபி(ஸல்)அவர்களின் பேரர்) ஹி 61

35. உகைல் பின் அலி (ரழி) ஹி 60
36. ஜாபிர் பின் அபீதாலிப் (ரழி - அலியின் சகோதரர்) ஹி 08
37. அப்துல்லாஹ் பின் மஸ்வூது (ரழி - பணியாள்) ஹி 32
38. அப்துல்லாஹ் பின் அபீஸல்மா (ரழி) ஹி 04
39. அப்துல்லாஹ் பின் ஜம்ஆ (ரழி) ஹி 35
40. அப்துல்லாஹ் பின் கைஸ் (ரழி) ஹி 50
41. அப்துல்லாஹ் பின் முக஻ப்பல் (ரழி) ஹி 59
42. அப்துல்லாஹ் பின் முதீ஻வு (ரழி) ஹி 73
43. அப்துல்லாஹ் பின் அம்ரு (ரழி - வயது 80) ஹி 63
44. அப்துல்லாஹ் பின் அப்பாஸ் (ரழி - வயது 75) ஹி 63
45. அப்துல்லாஹ் பின் உமர் (ரழி) ஹி 73
46. அப்துல்லாஹ் பின் ஜ஻பர் (ரழி) ஹி 80
47. அல்-ம்ர்பாக் - "துல் யதைன்ம் (ரழி) (பத்ரு) ஹி 02
48. அயாஷ் பின் அபீரபீஆ (ரழி) ஹி 15
49. ஃபழ்லு பின் அப்பாஸ் (ரழி) ஹி 15
50. பிலால் பின் ரிபாஹ் (ரழி - அத்தின்) ஹி 17
51. முஆதுப்னு ஜபல் (ரழி - கவர்னர்) ஹி 18
52. கதாதா பின் நு஻மான் (ரழி) ஹி 23
53. அபூஸு ஃப்யான் பின் ஹர்பு (ரழி) ஹி 32
54. அபூதர் அல்-ம஻ப்பாரி (ரழி-ஜு ன்துப் பின் ஜனாதா) ஹி 32
55. ஆமிர் பின் ரபீ஻ஆ (ரழி) ஹி 32
56. அபூதர்தா (உவைமிர் பின் மாலிக்) (ரழி) ஹி 32
57. அல்மிக்தாத் பின் அம்ர் (ரழி) ஹி 33
58. உபாதா பின் தாபித் (ரழி) ஹி 34
59. ஹு தை஻பா பின் யமான் (ரழி) ஹி 36
60. அஸ்வது இப்னு ஸரீ஻வு (ரழி) ஹி 36
61. சுஹைல் பின் ஸினான் (ரழி) ஹி 38
62. அபூ மஸ்வூது அல்-பத்ரி (ரழி-உக்பா பின் அம்ர் (ரழி) ஹி 40
63. ஹாரிஸ் பின் கஜ்மா (ரழி) ஹி 40
64. ஸ஻ப்வான் பின் உமய்யா (ரழி) ஹி 41
65. அபூபுர்தா பின் நியார் (ரழி) ஹி 41
66. உஸ்மான் பின் தல்ஹா (ரழி) ஹி 42

67. ஜைது பின் ஸாபித் (ரழி - செயலாளர்) ஹி 45

68. அபூமூஸா அல் - அஷ்அரி (ரழி) ஹி 50

69. முகீரா பின் ஷூ அபா (ரழி) ஹி 50

70. ஜரீர் பின் அப்தில்லாஹ் (ரழி) ஹி 51

71. அபூதல்ஹா (ரழி) ஹி 51

72. கஅப் இப்னு மாலிக் (ரழி) ஹி 51

73. உஸ்மான் பின் அபீஅஸ் (ரழி) ஹி 51

74. அபூபக்ரா ஹி52

75. இம்ரான் பின் ஹு சைன் (ரழி) ஹி52

76. அப்துர் ரஹ்மான் பின் அபூபக்ர் (ரழி) ஹி 53

77. ஹகீம் பின் ஹிஷாம் (ரழி) ஹி 54

78. அபூகதாதா - அல் - ஹாரித் பின் ரபீஆ (ரழி) ஹி 54

79. உஸாமா பின் ஜைது (ரழி) ஹி 54

80. தவ்பான் பின் பஜ்த்த ஹி 54

81. ஸஅதிப்னு அபீ வக்காஸ் (ரழி) ஹி 55

82. அர்க்கம் பின் அபீ அர்க்கம் (ரழி) ஹி 55

83. அபூஹு ரைரா (ரழி-அப்துர்ரஹ்மான் பின் சகர்) ஹி 57

84. உக்பா பின் ஆமிர் (ரழி) ஹி 58

85. அபூமஹ்தூரா (ரழி - முஅத்தின்) ஹி 59

86. ஜு பைர் பின் முத்யிம் (ரழி) ஹி 59

87. ஷைபா பின் உஸ்மான் (ரழி) ஹி 59

88. அவ்ஸ் பின் ஹு தைஃபா (ரழி) ஹி 59

89. முஆவியா பின் அபீ சுஃப்யான் (ரழி) ஹி 60

90. அல்கமா (ரஹ்) ஹி 62

91. ரபீஆ பின் கஅப் (ரழி) ஹி 63

92. புரைதா பின் அல்-ஹஸீப் (ரழி) ஹி 63

93. குர்ரத்துப்னு இயாஸ் அல்-முஜ்னீ (ரழி) ஹி 64

94. அபூ பர்ஸா - (நஹ்ல பின் உபைத் (ரழி) ஹி 64

95. மிஸ்வர் பின் மக்ஸமா (ரழி) ஹி 64

96. ஜு ன்து பின் அப்தில்லாஹ் (ரழி) ஹி 64

97. அந்நுஃமான் பின் பஷர் (ரழி) ஹி 65

98. அனஸ் பின் கைஸ் (ரஹ்) ஹி 67

99. அவ்ஃப் பின் அல்-ஹாரித் (ரழி) ஹி 68

100. குவைலத்துப்னு அம்ர் (ரழி) ஹி 68

101. ஜைது பின் அர்கம் (ரழி) ஹி 68

102. ஜைது பின் காலித் (ரழி) ஹி 68

103. அதி பின் ஹாதம் (ரழி) ஹி 68

104. அல்பர்ராவு பின் ஆஜிப் (ரழி) ஹி 72

105. அஸ்மாவு பின்து அபீபக்கர் (ரழி) ஹி 73

106. ரபீவு பின் கதீஜ் (ரழி) ஹி 73

107. ஜைனப் பின்து அபீஸல்மா (ரழி) ஹி 73

108. அபூஸயீத் அல்-குத்ரீ (ரழி) ஹி 74

109. ஸல்மதுப்னு ஆமிர் (ரழி) ஹி 74

110. மாலிக் பின் அல் - ஹு வைரிஸ் (ரழி) ஹி 74

111. அல்-ஜு ஹைஃபா - வஹப் பின் அப்தில்லாஹ் (ரழி) ஹி 74

112. மாலிக் பின் ஆமிர் (ரஹ்) ஹி 74

113. ஜாபிர் பின் அப்தில்லாஹ் (ரழி) ஹி 78

114. அம்ர் பின் அபீ ஸல்மா (ரழி) ஹி 83

115. ஷகீக் (ரஹ்) ஹி 83

116. முஹம்மதுப்னு ஹாதிப் (ரழி) ஹி 86

117. ஸஹல் பின் ஸவுது (ரழி) ஹி 88

118. ஸாயிப் பின் யஜீது (ரழி) ஹி 91

119. அனஸ் பின் மாலிக் (ரழி - பணியாள்) ஹி 91

120 உர்வா பின் அல்-ஜு பைர் (ரஹ்) ஹி 93

121. இப்னு முஸைப் (ரஹ்) ஹி 93

122. ஸயீத்துப்னு ஜு பைர் (ரஹ்) ஹி 94

123. உமர் பின் அப்தில் அஜீஸ் (ரஹ்) ஹி101

124. அதாவு பின் யஸார் (ரஹ்) ஹி 103

125. ஆமிர் பின் ஸஃது (ரஹ்) ஹி 104

நான்கு மத்ஹபுகளின் இமாம்கள்

126. இமாம் அபூஹனீபா (ரஹ் -நுஃமான் பின் தாபித்) வயது 70 ஹி 150

127. இமாம் மாலிக் (ரஹ்-மாலிக் பின் அனஸ்) வயது 86 ஹி 179

128. இமாம் ஷாபிஈ (ரஹ்-இத்ரீஸ் பின் ஷாபிஈ) வயது 54 ஹி 204

129. இமாம் ஹம்பளி (ரஹ் -அஹ்மதுப்னு ஹம்பள்) வயது 79 ஹி 243 ஹதீஸ் கலா வல்லுநர்கள்

130. இமாம் புகாரி (ரஹ்) வயது 62 ஹி194-256

131. இமாம் முஸ்லிம் (ரஹ்) வயது 57 ஹி204-261

132. இமாம் அபூதாவூத் (ரஹ்) வயது 73 ஹி202-275

133. இமாம் நஸயீ (ரஹ்) வயது 88 ஹி215-302

134. இமாம் திர்மிதி (ரஹ்) வயது 70 ஹி209-279

135. இமாம் இப்னுமாஜா (ரஹ்) வயது 64 ஹி209-273

136. இமாம் தாரமி (ரஹ்) வயது 74 ஹி 181-205

137. இமாம் அபூதாவத் தயாலிஸி (ரஹ்) மரணம் ஹி 204

138. இமாம் இப்னு குசைமா (ரஹ்) வயது 88 ஹி 223-311

139. இமாம் அபூஅவானா (ரஹ்) மரணம் ஹி 316

140. இமாம் இப்னுஹிப்பான் (ரஹ்) வயது 64 ஹி209-273